துவ சித்தத்
ந்து கொள்ளு
எப்படி?

J.சாம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

அர்ப்பணம்!

தேவ சித்தத்தின் வழியிலே
அருமையாய் நடத்தி,
காத்து, பராமரிக்கிற
என் அருமை இயேசு ராஜாவுக்கே!

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	சித்தத்தை அறிவியும்	5
2.	மூன்று சித்தங்கள்	9
3.	என்ன சித்தம்	13
4.	கர்த்தர் தந்த தீபம்	21
5.	தரிசனங்கள்	29
6.	வனசம் வழி காட்டும்	39
7.	ஆண்டவருக்குச் சித்தமானால்	49
8.	தாவீதும் தேவனுடைய சித்தமும்	56
9.	தேவ சித்தம் செப்பாதவர்	61
10.	இன்னும் சில வழிகள்	67
11.	பத்து ஆசீர்வாதங்கள்	72

அத்தியாயம் 1

சித்தத்தை அறிவியும்!

ஒரு வேளை கர்த்தர் என் முன்தோன்றி, ''மகனே, நீ என்னிடத்தில் எதையாவது கேட்கவேண்டுமென்று விரும்புகிறாயா?'' என்று கேட்பாரேயாகில், நான் அவரிடம் கேட்கும் முதல் கேள்வி, ''ஆண்டவரே, என் முழு வாழ்க்கையை குறித்த உமது சித்தம் என்ன?'' என்பதாகத்தான் இருக்கும்!

ஏனெனில் கர்த்தருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்து அவரது வழிகளை ஏற்றுக் கொண்டால், நம் பாதையெல்லாம் சந்தோஷமாகவும், சமாதானமாகவும், தேவ பிரசன்னம் நிரம்பியதாகவும் இருக்கும்!

தேவ சித்தத்தை விட்டு விலகும்போது சாத்தான் நம்மேல் ஆளுகை செய்ய வருகிறான். வாழ்க்கைக் கடல் கொந்தளிக்கிறது. எத்தனையோ பாடுகளையும், துன்பங்களையும் அனுபவித்துவிட்டு பின் கலங்க வேண்டியதிருக்கிறது! நமது வாழ்க்கையின் அனுபவங்கள் இதை நமக்கு அழகாக விளக்குகின்றன.

உதாரணமாக, ஒரு வாலிபனுக்கு, கர்த்தர் தம் சித்தத்தின்படி ஒரு பெண்ணை முன் குறித்திருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அவன் தேவசித்தத்தை அறிந்து கொள்ள விருப்பப்படாமல், தன் மாம்ச இச்சையின்படி வேறொரு பெண்ணை நேசிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் அந்தப் பெண் இன்னொருவனுக்கு மனைவியாக வேண்டியவளாக இருப்பாள். இதற்கிடையில் அந்த வாலிபன், தான் இச்சித்த பெண்ணையே கூட்டிக் கொண்டு ஓடிப்போய் திருமணம் செய்தால், அந்த வாலிபன் பல பாவங்களுக்கு உள்ளாகிறான்.

1. தனக்கு வரவேண்டிய மனைவியைப் புறக்கணித்த பாவம்.
2. வேறொருவனுக்கு சொந்தமாகவேண்டிய மனைவியை தான் எடுத்துக்கொண்ட பாவம்.

3. தேவனுடைய தீர்மானத்தை முறித்துப் போட்ட பாவம்.

அத்தனையும் அவன் வாழ்க்கையைச் சூழ்வதால் அவன் குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியாய் அமைவதில்லை. காலம் கடக்கும்போது கணவனுக்கும் மனைவிக்குமிடையில் ஓயாத சண்டைகள், சந்தேகங்கள், போராட்டங்கள், பிள்ளைகளுக்கும் சாபங்கள்... முழு வாழ்க்கையும் நிம்மதியில்லாமல் பாழாய் போகும்!

ஆகவே, வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதிகளிலும் தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுத்து அவரது வழிகளை ஏற்றுக் கொள்வது நித்தியமான நன்மைகளை நமக்குத் தரும்!

பல வேளைகளில் கர்த்தருடைய சித்தம் நமது சுய விருப்பங்களுக்கு சற்று மாறாக இருந்தாலும், போகப் போக அது எத்தனை இனிமையாகவும் நன்மையாகவும் இருக்கிறதென்பதை அறிந்து கொள்ளலாம்! பிற்காலத்தில் தான், முந்திய காலத்தின் நமது விருப்பங்கள், வாஞ்சைகள் எல்லாம் எவ்வளவு அறியாமையாய், முட்டாள் தனமாக இருந்திருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம்!

தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போது தேவன் நமக்கு மிகச் சிறந்ததையே தந்தருளுகிறார்!

தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போது, நாம் தேவனைப் பிரியப்படுத்துகிறோம். தேவன் நம்மில் மனமகிழ்கிறார்.

தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போது எப்பொழுதும் நம் உள்ளம் தேவசமாதானத்தால் நிரம்பியிருக்கும்.

அநேகர் தேவ சித்தத்திற்காக கர்த்தருடைய பாதத்தில் காத்திருந்து, வேதம் வாசித்து, தேவ ஆவியானவர் உணர்த்துகிறதை அறிந்துகொள்ள நேரம் செலவழிக்க விரும்புகிறதில்லை. பொறுமையும் அவர்களுக்கு இல்லை.

எங்கேயாது 'ரெடிமேட்' தேவ சித்தம் கிடைக்குமா என்று அலேகிறார்கள்.

ஒரு தீர்க்கதரிசனம் உரைக்கிற சகோதரியிடம் ஓடிப் போய் ஜெபித்து, உடனே அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்து கர்த்தர் வெளிப்படுத்தி விடவேண்டும் என்று எண்ணுகிறார்கள். நல்லதுதான். கர்த்தர் அப்படி உனக்கு வெளிப்படுத்தக் கூடும். ஆனால் கர்த்தருடைய கிருபையான தீர்க்கதரிசனங்களை நீ குறி சொல்லும் ஆவியாக பயன் படுத்துவதுதான் வேதனையானது!

இந்த பழக்கம் இன்று நம் கிறிஸ்தவ சமுதாயத்தில் மிகவும் முற்றிப்போய் விட்டதால். இன்று எல்லா திசைகளு லும் குறி சொல்லுகிறவர்களும், குறி கேட்பவர்களும் பெருகிப்போனார்கள்.

ஊழியர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் மற்றவர் களுக்கு தேவ சித்தத்தைக் கண்டுபிடித்து சொல்லிக்கொண் டேயிருந்தால், அவர்கள் ஊழியம் செய்வது எப்படி? நரகக் கடலிலிருந்து ஜனங்களை தப்புவிப்பது எப்படி? கிறிஸ்துவின் வருகைக்கென்று ஆயத்தப்படுவது — ஆயத்தப்படுத்துவது எப்படி?

எனக்கு ஏராளம் கடிதங்கள் அப்படி வரும், "ஐயா, என் மகன் மெடிக்கல் காலேஜுக்கும், இஞ்ஜினியரிங் காலே ஜுக்கும் விண்ணப்பித்திருக்கிறான். எந்த காலேஜுக்கு அவன் போகவேண்டும் என்பதை நீங்கள் மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்து, கண்டுபிடித்து எழுதுங்கள்."

"ஐயா, என் மகனுக்கு மூன்று பெண் வீட்டார் வந்திருக் கிறார்கள். முதல் பெண் மாநிறம், B.Sc., 25,000 ரொக் கம், தகப்பன் உயர்தர அதிகாரி. பெண்ணுக்கு வேலையில்லை. இரண்டாவது பெண் கறுப்புத்தான். ஆனால் இலட்சண மானவள். M.A. படித்திருக்கிறாள். 50,000 ரொக்கமும் நகையும் போடுகிறார்கள். தகப்பன் இல்லை. மூன்றாவது பெண் B.Sc., B.Ed., வீட்டிற்கு ஒரே பெண். சொந்த வீடு, கார் எல்லாம் இருக்கிறது. ஆனால் காது சரியாக கேட்

காது... இந்த மூன்று பெண்களில் எந்தப் பெண்ணை திருமணம் செய்வது தேவசித்தம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் எப்படியாவது ஒரு வாரம் உபவாசித்து கர்த்தரிடம் கேட்டு எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்."

இப்படி கடிதங்கள் வருவது ஏராளமாகிவிட்டது. பல வேளைகளில் கடிதங்கள் வாசிக்கும்போதே கர்த்தர் என் உள்ளத்தில் உணர்த்துவதை நான் எழுதுவேன். சிலவற்றிற்குத் தனியாக ஜெபித்து பதில் எழுதுவதுமுண்டு. ஆனால் எனக்குள்ள 12,000 வாசகர்களில் ஒவ்வொருவருக்காகவும் நான் மாறி மாறி, தொடர்ந்து உபவாசித்துக் கொண்டிருந்தால் என் ஊழியம் என்னவது?

ஜனங்கள் மத்தியில் தேவ சித்தத்தை அறிய வேண்டும் என்றும், தேவ சித்தத்தின்படி வாழ வேண்டும் என்றும் ஏற்பட்டிருக்கும் உணர்வுக்காக, வாஞ்சைக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்!

ஆகவே இந்த சிறிய நூல், தேவ சித்தத்தை அறிந்து கொள்ளும் வழிகாட்டியாக தேவ ஜனங்களுக்கு பயன்படும் அநேக சந்தேகங்களை நிவர்த்தியாகும்!

அத்தியாயம் 2

மூன்று சித்தங்கள்!

''உங்கள் தேவனுடைய சித்தத்தின்படியே செய்யுங்கள்" (எஸ்றா 7:18).

மூன்று வித சித்தங்கள் மனிதனோடு இடைபடுகிறது!

1. மனிதனுடைய சுயசித்தம் 2. சாத்தானுடைய சித்தம்

3. கர்த்தருடைய சித்தம்!

ஒவ்வொரு விசுவாசியும் இந்த மூன்றையும் அறிந்து கொள்ளா விட்டால், இதில் சரியான தெளிவு இல்லா விட்டால் வழிவிலகிப் போவது உறுதி!

1. மனுஷ சித்தம்:-

தேவன் மனுஷனுக்கு சுய சித்தம் கொடுத்திருக்கிறார் நன்மையையும் தீமையையும் பகுத்துணர்கிற அறிவையும் தந்திருக்கிறார். அவனது மனம் அவனை அவன் சுயசித்தத்தின் பாதையில் நடத்துகிறது. ஆகவே அவன் மனமும் மாமிசமும் விரும்பிய வழிகளில் நடக்கிறான். அவன் தன் சுயசித்தத்தை கடந்த கால அனுபவங்களாலும், நிகழ்காலத்தைப் பற்றிய அறிவினாலும் நிதானித்து வழி நடக்க முயற்சிக்கிறான். வேதம் சொல்கிறது, ''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி 16:25). எதிர்காலத்தைக் குறித்து அறியும் அறிவு மனுஷனுக்கு இல்லாதபடியால் சுயசித்தத்தை சார்ந்திருந்து ஜெயம் பெற அவனால் முடிகிறதில்லை.

2. சாத்தானின் சித்தம்:-

ஆதாம் ஏவாளின் பாவத்தினிமித்தம் உலகம் சாத்தானுடைய ஆளுகைக்குள் வந்தது! பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாகிய அவன் தன் சித்தத்தை மக்கள் மேல் திணிக்

கிறான். அவன் முழு வேலையும் கர்த்தருக்கு விரோதமாய் மக்களை செயல்பட வைப்பதுதான். மனுஷ கொலைபாதகனும், திருடனுமாகிய அவன், திருடவும், கொல்லவும், அழிக்கவுமே வருகிறான் (யோவான் 10:10). தனக்கு நியமிக்கப்பட்ட அக்கினிக் கடலுக்குள் ஜனங்களையும் இழுத்துச் செல்ல வேண்டும் என்று அவன் விரும்புகிறான்.

அவன் பிசாசின் ஆவியாய் மனுஷனைப் பிடித்து அவனது சுய சித்தத்தை மேற்கொண்டு, முழுவதுமாய் அவன் ஆவி ஆத்துமா சரீரத்தை ஆட்கொள்ளுவதுண்டு. வேதத்தில் லேகியோன் பிசாசு பிடித்த மனுஷனைக் குறித்து வாசிக்கிறோமல்லவா? அவன் வஸ்திரங்கள் இல்லாமல், கற்களால் தன் சரீரத்தைக் கீறிக் கொண்டு, கல்லறைகளின் மத்தியில் குடியிருந்தான் என்று வேதம் சொல்கிறது. காரணம் அவன் சித்தம் பூரணமாய் சாத்தானால் ஆட்கொள்ளப்பட்டு விட்டது!

இன்னொரு விதத்தில் சாத்தான் நமது சித்தத்தின் மேல் ஆளுகை செய்வான். காதுகளின் அருகில் வந்து சினிமாவுக்குப்போ என்று திரும்பத் திரும்ப கூறுவான். விபசார சிந்தனைகளை எழுப்பி விடுவான். தற்கொலை செய்து கொள் என்று மீண்டும் மீண்டும் கூறி மனுஷனின் சித்தத்தை அவன் சித்தத்தால் வழி நடத்திச் செல்லுவான். இது மிகவும் ஆபத்தானது!

தேவ ஜனங்கள் சாத்தானுடைய குரலை அறிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் நாமத்தில் அவனை எதிர்த்து நின்று அதட்டினால் அவன் ஓடிப் போவான்!

3. கர்த்தரின் சித்தம்:-

மனிதனைப் பற்றிய கர்த்தரின் சித்தமும் உண்டு. நம்மை அவரே சிருஷ்டித்ததாலும். நமக்காக கல்வாரியிலே விலைக்கிரயம் செலுத்தி நம்மை மீட்டபடியினாலும் நம்மேல் அவருக்கு அக்கறையும், ஆர்வமும், உத்திரவாதமும் உண்டு.

''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார்'' (I தீமோ 2:4).

ஆகவே அவர் மனுஷனுடைய ஆவியோடு போராடி, பாவங்களைக் கண்டித்துணர்த்தி, தன் பாதையிலே திருப்புகிறார். அதற்காகவே பரிசுத்த ஆவியானவரை நமக்கு ஒத்தாசையாக தந்திருக்கிறார்.

4. மனித சித்தமும் கர்த்தரின் சித்தமும்:-

மனித சித்தம் பெலவீனமானது. தனித்து தொடர்ந்து இயங்க முடியாதபடி சாத்தான் அதைத்தடுத்து அவன் அதை ஆட்கொண்டு விடுகிறான். ஆகவே ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருடைய சித்தத்தில் இணைந்து கொள்வதே உத்தமம்.

ஒருவன் இரட்சிக்கப்படும்போது கர்த்தருடைய பரலோக சித்தமே செய்யப்படுகிறது. எனவே நாம் ஜெபிக்கிறோம். ''உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக'' என்று சொல்கிறோம்.

பரலோகத்திலுள்ளவைகள் எல்லாம் தேவ சித்தம் செய்கின்றன. மாபெரும் தேவ தூதர்கள் கர்த்தருடைய கட்டளைகளை ஒருபோதும் எதிர்த்துப் பேசாமல் அப்படியே நிறைவேற்றுகிறார்கள். கேருபீன்கள், சேராபீன்கள், நான்கு ஜீவன்கள், இருபத்து நான்கு மூப்பர்கள், இன்னும் பரலோகத்திலிருக்கிற அத்தனை பேரும் தேவ சித்தம் செய்கின்றனர். மட்டுமல்ல, சகல இயற்கையும், மிருக ஜீவன்களும், பறவைகளும் கர்த்தருக்கு அப்படியே கீழ்ப்படிந்து அவரது உத்தரவை நிறைவேற்றுகின்றன.

5. மனிதனின் சுய நலத்திட்டம்:-

ஆனால் மனுஷன் மட்டுமே கர்த்தருக்கு சித்தமானதைச் செய்யாமல் தன் சுயத்தில் சாருகிறான். எந்த சித்தம் தனக்கு சாதகமானது, லாபகரமானது என்று கணக்குப்

போகிறான். முடிவில் சாத்தானுக்கு அடிமைப்பட்டுப் போய்விடுகிறான்.

உதாரணமாக, யோனா தீர்க்கதரிசியை எடுத்துக் கொள்ளுங்கள். அவன் கர்த்தருடைய ஊழியக்காரனாய் இருப்பதால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற அவன் அழைக்கப்பட்டிருக்கிறான். தேவ சித்தம் என்ன? ""எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார்" (1 தீமோ 2:4).

ஆகவே நினிவேயின் மேல் அவருக்கு ஒரு அக்கறையுண்டு. நினிவே அழிக்கப்படாதபடிக்கு யோனாவை அங்கு அனுப்ப சித்தங்கொண்டார். ஆனால் அவனோ தர்ஷீசுக்கு கப்பல் ஏறினான்.

இதனால் எத்தனை வேதனைகள் வந்தது தெரியுமா? கடல் கொந்தளித்தது. கப்பலின் சரக்குகளுக்கு சேதம் ஏற்பட்டது. யோனா முடிவில் மீனின் வயிற்றுக்குள் போக வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று!

தேவ பிள்ளையே, உன் சுய புத்தியின் மேலோ, உன் சுய சித்தத்தின் மேலோ சாராமல் கர்த்தருடைய சித்தத்தின் பேரிலேயே சார்ந்து கொள்! அவர் வழிகளுக்கு உன்னை முற்றிலும் ஒப்புக்கொடு! அவர் சித்தமே உன்னில் நிறைவேறட்டும்! அப்பொழுது என்றென்றும் நீ அசைக்கப்படுவது இல்லை!

என்ன சித்தம்!

"ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?" (அப். 9:6).

இந்த சிறிய ஜெபம் எத்தனை ஆழமானது! நான் என் சுயசித்தம் செய்தது போதும். இனி என் சித்தம் வேண்டாம். உமது கைகளைப் பிடித்த நான் இனி உம் சித்தமே செய்வேன்.

ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையின் வாழ்க்கையைக் குறித்தும் தேவனுக்குத் திட்டமான ஒரு நோக்கமும், சித்தமும் உண்டு. நமது குணாதிசயங்கள், தாலந்துகள், தேவைகள், சூழ்நிலைகளைக் கவனித்து நமக்கென்று ஒரு திட்டத்தை கர்த்தர் வைத்திருக்கிறார். நாம் அதற்கென்று நம்மைப் பூரணமாய் அர்ப்பணித்தால், தேவன் தம் சித்தத்தை நம்மிலே நிறைவேற்றுவார்.

தமஸ்கு வீதியிலே கர்த்தர் சவுலைச் சந்தித்தபோது உடனே அவன் ஆண்டவரைப் பார்த்துக் கேட்ட கேள்வி "ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்"? என்பதுதான். ஆம், அவன் தன்னை அறியாமலே தன் சித்தத்தை கீழே போட்டு, தேவசித்தத்தை தன்மேல் ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருந்தான்.

கர்த்தர் சொன்னார், "நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ; நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார். அப்படியே அவன் அங்கே சென்றபோது அனனியா மூலம் அவனுக்குத் தம் சித்தத்தைத் தெரிவிக்க சித்தம் கொண்டார்.

தேவபிள்ளையே, உன் உள்ளம் எப்பொழுதும், "ஆண்டவரே,நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று

ஜெபித்துக் கொண்டிருக்கட்டும். ஒவ்வொரு காலடியை எடுத்து வைக்கும் போதும், ''ஆண்டவரே, உம் சித்தத்தின் பாதையிலேயே என்னை நடத்தும்" என்று மன்றாடு!

உன்னை நடத்துவேன் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறாரே!

1. வாக்குத்தத்தம்:-

''நீங்கள் வலது புறமாகச் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும்போதும்; வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசா 30:21).

எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம் இது! நாம் கர்த்தருடைய சித்தத்தை அறியவும், அதின்படி செய்யவும் நம் உள்ளத்தைக் கர்த்தர் பக்கமாகம் திருப்பும்போது, அவர் தமது சித்தத்தை நமக்குத் தெரியப்படுத்தி நம்மை வழி நடத்த நம்மைப் பார்க்கிலும் அதிக ஆர்வமுடையவராக இருக்கிறார்.

''வழி இதுவே, இதிலே நடவுங்கள்'' என்று சொல்லும் வார்த்தைகளை உங்கள் காதுகள் கேட்கும் என்று உறுதியான வாக்குறுதியைக் கொடுக்கிறார். அல்லேலூயா!

நம்முடைய வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய திட்டம் என்ன? தீர்மானம் என்ன? சித்தம் என்ன? என்பதையெல்லாம் அறிந்து கொள்வது நம்மேல் உள்ள கடமையாயிருக்கிறது.

குட்மேன் என்ற பக்தன் சொன்னார், ''கிறிஸ்தவன் யார்? தன் சுயசித்தத்தை ஒதுக்கி விட்டு, தேவ சித்தத்திற்கு பரிபூரணமாய் தன்னை ஒப்புக் கொடுத்து அவருடைய சித்தத்தின்படி செய்கிறவன் ஆவான்'' என்றார்.

கிறிஸ்துவின் சித்தம் என்ன என்று அறிந்து கொள்ளுவது ஒருபோதும் உனக்குப் பிரச்சனையாக இருக்க வேண்டாம். ஏனெனில் கர்த்தர் அதை உனக்கு வெளிப்

படுத்துவேன் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறாரே! அருமை இரட்சகரை அளவில்லாமல் நேசித்து கல்வாரி அன்பால் நிரப்பப்பட்டு, அவரது சித்தம் செய்ய தீர்மானஞ் செய். அப்பொழுது கர்த்தர் அருமையாய் உன்னை தமது சித்தத்தின் பாதையில் நடத்துவார்.

உன் உள்ளத்தில் எப்பொழுதும் ஆண்டவரே, இது உமக்குச் சித்தமா? என்கிற ஜெபம் இடைவிடாமல் ஓடிக் கொண்டிருக்கட்டும்.

2. களை பிடுங்க சித்தமா?

''நாங்கள் போய் அவைகளைப்பிடுங்கிப் போட உமக்குச் சித்தமா?'' (மத் 13:28).

பயிர்களோடு களைகளும் வளர்கிறது. பயிர்களுக்குச் செல்ல வேண்டிய உரத்தையும், தண்ணீரையும் உறிஞ்சி களைகள் செழிக்கின்றன. பயிர்களை விட இவைகள் வேகமாக வளர்ந்து பயிர்களை ஒடுக்கி, பயிர்களுக்குக் கிடைக்க வேண்டிய சூரிய ஒளியை அபகரித்துக் கொள்கின்றன.

சாத்தானால் விதைக்கப்படுகிற இந்த களைகளைப் பிடுங்கி எறிவதே உலக ஞானம். களைகள் பயிர்களுக்கு இடையூறாக இருக்கிறதே! மாம்சப் பிரகாரமாய் களைகளைப் பிடுங்கவே நாம் தீவிரிக்கிறோம்!

இன்றும் சபைகளில் களைகளைப் பார்க்கிறோம். சில மூப்பர்கள், கமிட்டி அங்கத்தினர்கள், எந்த பக்தியும் இல்லாமல் தங்கள் பணச் செல்வாக்கால் பதவியில் இருந்து கொண்டு உண்மை விசுவாசிகளை ஒடுக்குகிறதையும், ஜாதி துவேஷத்தைப் பரப்புகிறதையும் பார்க்கிறோம். சில கொடுமைகள் நம் இரத்தத்தைக் கொதிக்க வைக்கிறது.

ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டு வரும் ஓநாய் களைக் கண்டு பிடிக்கும் போது அவர்கள் முகத்திரையைக் கிழிக்க வேண்டும் என்று துடித்து விடுகிறோம். கள்ளத் தீர்க்கதரிசிகள், துர் உபதேசக்காரர் பக்தியின் வேஷம்

தரிக்கும் மாய்மாலக்காரரை வெளியரங்கமாக்கி களை பிடுங்க எண்ணுகிறோம்.

ஆனால் அதற்கு முன் அது கர்த்தருக்கு சித்தமா? அந்த விஷயத்தில் கர்த்தருடைய உள்ளத்திலிருக்கும் நோக்கம் என்ன? என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அன்று களைபிடுங்கவா என்று கேட்டவர்களுக்கு எஜமான் கொடுத்த பதில் என்ன தெரியுமா? ''வேண்டாம்'' என்பதே! ஆச்சரியமாய் இருக்கிறதல்லவா? ஆம்! அதற்கு ஒரு விளக்கத்தையும் கொடுத்தார்.

'வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையும் கூட வேரோடு பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள். அறுப்புக் காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது களைகளைப்பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டு களாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன்" என்றார்.

பயிர் விளையும் நேரத்தில் களைகளைப் பிடுங்குவது தேவ சித்தமல்ல. கர்த்ருதடைய கண்கள் பயிர்கள் மேல் நோக்க மாயிருக்கிறது களை பிடுங்கும் போது பயிர்கள் பிடுங்கப்பட்டு விடக்கூடாதே! உத்தம விசுவாசிகள் இடறிவிடக்கூடாதே! சிறியரில் ஒருவராவது கெட்டுப் போகக் கூடாதே என்று அவர் நோக்குகிறார்!

களைகள் வளரட்டும், அறுப்புக் காலம்வரை வளரட்டும்; பிடுங்கப்பட்டு அக்கினிச் சூளையிலே போடப்படும்வரை வளரட்டும். நியாயத்தீர்ப்பு நாள் சமீபமாயிருக்கிறது!

களை பிடுங்க வேண்டும் என்பதில் உனக்கு இருக்கும் ஆர்வத்தை விட கர்த்தருக்கு அதிக ஆர்வமுண்டு. ஆனால் களைகளைப்பிடுங்க தேவன் உனக்கு உத்தரவு கொடுப்பதில்லை!

தேவபிள்ளையே, ஒன்றை மறந்து போகாதே! கோதுமையை வளர்ப்பது உன் பொறுப்பு, களைகளைக் கவனித்துக் கொள்வது கர்த்தருடைய பொறுப்பு!

5. கூடாரம் அடிப்பது சித்தமா?

"உமக்கு சித்தமானால்... மூன்று கூடாரங்களை போடு வோம்" என்றான் (மத் 17:4).

மறுரூப மலை அனுபவத்தில் மெய்மறந்த பேதுரு, அங்கேயே கூடாரமடித்து தங்க விரும்பி, ஆண்டவரைப் பார்த்து, "அது தேவ சித்தமா?" "தேவ சித்தமானால் கூடாரமடித்து விடலாமே?" என்று கேட்கிறதைப் பார்க் கிறோம்

மறுரூப மலை அனுபவம் எல்லாவிதத்திலும் மேன்மை யானதே! அங்கே இயேசுவின் மகிமை விளங்குகிறது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் கலந்து உரையாடுகிறார் கள் ஒளியுள்ள மேகம் அவர்கள்மேல் நிழலிடுகிறது. பர லோகத்திலிருந்து குரல் ஒலிக்கிறது. அமைதியான தெய்வீக பிரசன்னம் விளங்கும் மலை உச்சி அது! பரிசேயரோ, குற்றஞ் சாட்டும் வேத பாரகரோ அங்கு இல்லை. ஆகவே அந்த இடத்தில் கூடாரம் அடித்து விட பேதுரு துடித்ததில் ஆச் சரியம் ஒன்றுமில்லை!

ஆனால் அது தேவனுக்கு சித்தமா? என்பதுதான் கேள்வி. கர்த்தர் அதற்கு சம்மதித்தாரா?

இல்லை! மறுரூபமலையில் கூடாரம் போட தேவன் பேதுரு வுக்கு இடமளிக்கவில்லை! அத்தனை மேன்மையான அனுபவங் களில் தொடர்ந்து மெய்மறந்து லயித்து இருக்க கர்த்தர் ஏன் அனுமதிக்கவில்லை?

ஏன் தெரியுமா? மலையின் கீழே துயரமுள்ள, பிரச்சனை யுள்ள எண்ணற்ற மக்கள் உண்டு. மேய்ப்பனில்லாத ஆடுகள் உண்டு. இருளிலே புழுக்களைப்போல நெளிந்து உண்மை யான கடவுளைத் தேடும் மக்கள் கோடி கோடியாய் உண்டு. அவர்களைக் குறித்த கரிசனையில்லாமல், அவர்கள் நரகத் திற்கோ பாதாளத்திற்கோ போகட்டும் என்று நிர்விசார மாய் இருந்து தாங்கள் மட்டும் மறுரூப மலையிலே கூடார மடித்துப் பரவசமடைந்து கொண்டிருக்க கர்த்தர் உத்தரவு கொடுக்கவில்லை!

இழந்து போனதைத் தேடி இரட்சிக்க வேண்டாமா? மக்களுக்காக மனங்கசந்து ஜெபிக்க வேண்டாமா? பாடுபட்டு இரத்தம் சிந்த வேண்டாமா?

இன்று அநேக ஆவிக்குரிய சபைகள், தாங்கள் மறுரூப மலையில் கூடாரமடித்து விட்டதாக எண்ணி, நான்கு சுவர்களுக்குள் பறந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களால் ஜீரணிக்க முடியாத பிரசங்கமாகிய ஆவிக்குரிய பிரியாணியை வயிறு புடைக்க உண்டு, ஆத்தும பாரமில்லாமல், மற்ற சபைகளைக் குறை கூறி காலத்தைக் கடத்துகிறார்கள். தேவ பிள்ளையே, இது தேவ சித்தமில்லை! கர்த்தருக்காக செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் உன்னை ஒப்புக்கொடு!

தேவசித்தம் என்ன?வேதம் சொல்கிறது,"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும்.சத்தியத்தை அறிகிறஅறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார்" (I தீமோ 2:4).

4. காதுகளை வெட்டுவது சித்தமா?

மற்றவர்களின் காதுகளை வெட்டுவதுதான் எங்கள் ஊழியம்; இதுதான் தேவசித்தம் என்று சிலர் பட்டயத்தோடு புறப்பட்டிருக்கிறார்கள். சிலர் காதுகளை மட்டுமல்ல, மூக்கையும், வாயையுமே அரிந்து விடுவதென்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

அன்று பேதுரு, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை "மல்குஸ்" ின் வலது காதை, காதற வெட்டினான். (மத் 26:51, யோவான் 18:10).

இயேசு சொன்னார், "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள். பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணுதிருப்பேனோ" என்றார் (மத் 26:52, யோவான் 18:11).

பட்டயத்திலும் கொடூரமானது நாக்கு! நாக்கை சுழற்றி சுழற்றியே அநேகர் ஊழியர்களை மனமுடைந்து போகச் செய்து விடுகிறார்கள். ஊழியங்களை நாசமாக்கி விடுகிறார்கள்.

அன்றைக்கு கர்த்தர் மிரியாமையும் ஆரோனையும் கூப்பிட்டுக் கேட்டார். ''என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய் பேச, உங்களுக்கு பயமில்லாமற் போனதென்ன?'' என்றார். கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூண்டது. அவர் போய் விட்டார். மேகம் கூடாரத்தை விட்டு நீங்கிப் போயிற்று. மிரியாம் உறைந்த மழையின் வெண்மையைப் போன்ற குஷ்டரோகியானாள்.

தாங்கள் கர்த்தருடைய ஊழியத்தை சீர்திருத்துவதாக எண்ணிக் கொண்டு, இதுதான் தேவசித்தம் என்று தவறாக உணர்ந்து, கர்த்தருடைய கோபாக்கினையை தங்கள் மேலும், சாபங்களைத் தங்கள் பிள்ளைகள் மேலும் வரவழைத்துக் கொள்ளுகிறார்கள்.

பட்டயத்தால் வெட்டுவது ஒருபோதும் தேவ சித்தமல்ல!

5. அக்கினியால் அழிப்போமா?

இயேசுவை சமாரியாவிலுள்ள ஒரு கிராமத்தார் ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே சீஷராகிய யாக்கோபுக்கும், யோவானுக்கும் கோபம் வந்தது.

''ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்கு சித்தமா?'' (லூக் 9:54).

''உமக்கு சித்தமா?'' என்று எவ்வளவு ஆர்வத்தோடு தேவசித்தத்தை நிறைவேற்ற அவர்கள் கேட்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

நல்ல வேளை, அப்படி இயேசுவிடம் கேட்டார்கள். இல்லா விட்டால் அந்த முழு கிராமமும் எரிந்து சாம்பலாய்ப் போய் இருந்திருக்கும்!

இயேசுகிறிஸ்து அவர்களை அதட்டி, ''மனுஷ குமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்" என்றார் (லூக் 9:56).

இன்னும் அநேகர் நியாயப்பிரமாண காலத்திலேயே இருந்து கொண்டு, கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்று முழக்கமிடுகிறார்கள். இன்னும் சிலர், ''துஷ்டநிக்ரஹா; இஷ்ட பரிபாலனா" என்று அக்கினியை இறக்க ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

ஆனால் நாம் இருப்பது கிருபையின் காலம்! கர்த்தர் எவ்வளவாக கிருபையில் ஐசுவரியமுள்ளவராய் இருந்து நமக்கு இரக்கம் செய்தார்! எவ்வளவாய் நம்மைத் தப்பு வித்தார்!

மற்றவர்களை அழிப்பதோ, தண்டனைக்குட்படுத்துவதோ கிறிஸ்துவின் ஆவியல்ல. அவர் எந்த மனுஷனையும் தள்ளா தவர், எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கச் செய்கிற மெய்யான ஒளி - எந்த மனுஷனையும் கிறிஸ்துவுக்குள்ளாக தேறினவனாக நிற்கச் செய்கிறவர். ஆகவே—

களைகளை பிடுங்கலாமா?
கூடாரம் போடலாமா?
காதற வெட்டலாமா?
அக்கினியால் அழிக்கலாமா?

என்று நியாயத்தீர்ப்புக்காக தேவ சித்தத்தைத் தேடாமல், கிறிஸ்துவின் மனதுருக்கத்தால் நிரம்பி உன்னைத் தாழ்த்தி கர்த்தருக்கு ஊழியஞ் செய்வாயாக!

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. இது உங்களைக் குறித்த தேவ சித்தமாய் இருக்கிறது!

அத்தியாயம் 4

கர்த்தர் தந்த தீபம்!

"தேவனுடைய நன்மையும் பிரியமும் பூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2).

பூரண சித்தத்தினாலே மனம் புதிதாகிறது! சித்தத்திற்கும் மனதிற்கும் ஏதோ ஒரு உள் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது! தேவனுடைய பிள்ளைகள் தங்கள் மனச்சாட்சியின் மூலம் தேவனுடைய சித்தத்தை அறிகிறார்கள். மனச்சாட்சி அவர்களுக்குள்ளே ஒரு தெய்வீகக் குரலாயிருந்து கர்த்தருடைய சித்தத்தை அறிவிக்கிறது.

ஒரு இடத்திற்கு நாம் போக வேண்டும் அல்லது ஒரு காரியத்தை நாம் செய்ய வேண்டும் என்றால் அதை நாம் நம் மனதில் நினைக்கிறோம். அடுத்த படியாக கர்த்தர் இந்த சூழ்நிலையில் இருந்தால் நாம் போக வேண்டிய இடத்திற்குப் போவாரா, நாம் செய்கிற செயலை செய்வாரா என்று சிந்திக்கிறோம். அப்பொழுது நம் உள்ளான மனதில் ஒரு தீர்மானம் பிறக்கிறது. எது கர்த்தருக்குச் சித்தமானது என்பதை நம் மனம் உடனே கண்டுபிடித்து விடுகிறது.

மனச்சாட்சி சாட்சியிடுகிறதென்றும், அது குற்றமுண்டு குற்றமில்லை என்று தீர்க்கிறதென்றும் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் (ரோமர் 2:15). மனச்சாட்சிக்கு மீறி செய்வது தேவசித்தம் இல்லை என்பது மட்டுமல்ல; அது பாவமும் ஆகிறது!

கர்த்தர் தந்த தீபம்

இன்னும் சற்று ஆழமாக சிந்திப்போம். நீதிமொழிகள் 20:27 சொல்கிறது, "மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது" அதன் அர்த்தமென்ன வென்றால், தேவன்

தம்முடைய ஆவியின் மூலம் நம்மை வழிநடத்தி தம் சித்தத்தைத் தெரியப்படுத்துகிறார். எப்படி ஒரு தீபம் இருளில் இருப்பவற்றையும், வழிப்பாதையையும் விளக்கிக் காட்டுகிறதோ அப்படியே தேவன் மனுஷனுக்குத் தந்த ஆவியும் வழிகாட்டும்.

மனுஷனுக்கு ஆவி உண்டு. ஆத்துமா உண்டு. அதே நேரத்தில் சரீரமும் உண்டு. மனுஷனுடைய ஆவி தற்காலிகமாக மனுஷனுடைய சரீரத்தில் வாசம் பண்ணுகிறது.

அந்த சரீரம் மரணமடைந்து அழுகிப்போனாலும், அந்த மனுஷன் தன் ஆவியில் ஜீவிக்கத்தான் செய்கிறான். ஆவிக்கு ஒரு முடிவில்லையே! அது நித்தியமானது!

உதாரணமாக, அப். பவுல் கூறுவதைக் கவனியுங்கள்: ''ஏனெனில் இவ்விரண்டிலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு; அது அதிக நன்மையாயிருக்கும்'' (பிலி 1:23).

தன சரீர மரணத்தினால் ஏற்படும் நித்திய நன்மைகளை அவர் குறிப்பிடுகிறார். நான் மரித்தால் கிறிஸ்துவோடு ஜீவிப்பேன்; சரீரத்தில் இருந்தால் சபைக்குப் பிரயோஜனமாக இருப்பேன் என்பதே அவரது எண்ணம். தொடர்ந்து வாசியுங்கள்: ''அப்படியிருந்தும் நான் சரீரத்தில் தங்கியிருப்பது உங்களுக்கு அதிக அவசியம்'' (பிலி 1:24).

கவனியுங்கள், வெளிப்பிரகாரமான மனிதனும் உண்டு. உள்ளான மனிதனும் உண்டு.

வெளிப்பிரகாரமான மனிதன் தற்காலிகமானவன், வெறும் சரீரமே அவன். உண்மையான ''நீங்கள்'' அவனல்ல.

ஆனால் உள்ளான மனிதன் நித்தியமானவன். உங்கள் அறிவு, சிந்தனை எல்லாம் அவனிலிருந்தே இயங்குகிறது. அவன் நித்தியமானவன். உள்ளான மனுஷனே ''நீங்கள்'' ஆவீர்கள்.

இந்த உள்ளான மனுஷனில் தான், மனுஷனுடைய ஆவி இருக்கிறது! அதுவே கர்த்தர் நமக்குத் தந்த தீபமாயிருந்து, தேவசித்தத்தை அறியும்படி நமக்கு உதவுகிறது.

அப்போஸ்தலனுகிய பேதுரு, வெளியரங்கமான மனுஷனுக்குரிய அலங்கரிப்பையும், அதே நேரத்தில் உள்ளான மனுஷனுக்குத் தேவையான அலங்கரிப்பையும் வேறுபடுத்திக் காண்பிக்கிருர்-

"அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலேயேறப் பெற்றது" (Iபேதுரு 3:4).

கவனியுங்கள், "அமைதலுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே" என்று குறிப்பிடுகிருர். மறைந்திருக்கிற இந்த ஆவிதான் உள்ளான மனுஷன்.

ஒருவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது இந்த உள்ளான மனுஷன் புதிய சிருஷ்டியாய்த் தோன்றுகிருன். "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாயிருக்கிருன்" (IIகொரி 5:17) என்று அப்போஸ்தலனுகிய பவுல் கூறும் இரகசியம் அதுதான்.

நாம் மறுபிறப்படையும்போது அல்லது இரட்சிக்கப்படும்போது நம் சரீரம் ஒன்றும் மாறுவதில்லே! ஆனுல் நாம் நம் உள்ளான மனுஷனில் புது சிருஷ்டியாய் மாறிவிடுகிருேம். நம் உள்ளான மனுஷனில் தேவன் தீபத்தை ஏற்றி வைக்கிருர். உள்ளான மனுஷனும் தேவ ஆவியானவரும் நெருங்கி உறவாட ஆரம்பித்து விடுகிருர்கள்.

அநேகருக்கு இந்த இரகசியம் புரிவதில்லே! அவர்கள் எண்ணமெல்லாம் வெறும்சரீரத்தை அழகுப்படுத்துவதிலும், சரீரத்தை புஷ்டியாக்க உண்பதிலுமே இருக்கிறது! இதனுல் நாம் மாம்சீக கிறிஸ்தவர்களாய் இருக்கிருர்கள். தேவனுக்கேற்றவைகளே அறிய முடிவதில்லே! நம்முடைய முக்கியத்

அவம் ஆவியிலிருந்து, ஆத்துமாவுக்கு வந்து, பின் சரீரத்திற்கு வர வேண்டும்.

அப்.பவுல் எழுதுவதைக் கவனியுங்கள், "உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (II தெச 5:23).

முதலாவதாக, அவர் 'ஆவி' என்றும் பின்பு 'ஆத்துமா' அதன்பின் 'சரீரம்' என்று எழுதுவதைக் கவனித்தீர்களா? ஆம், கர்த்தர் தந்த தீபமாகிய ஆவிக்கு முக்கியத்துவம் கொடுப்பது எவ்வளவு அவசியம்! அந்த தீபத்தில் பரிசுத்த ஆவியாகிய எண்ணெய் வார்க்கப்பட்டால்தான் நாம் செல்ல வேண்டிய தேவ சித்தத்தின் பாதை நமக்கு பிரகாசமாய்த் தெரியும். அல்லேலூயா!

தேவன் நமக்குத் தந்த தீபமாகிய ஆவியினால், ஆவிக்குரிய உலகத்தோடு தொடர்பு கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியின் மூலம் தேவ சித்தத்தை அறிகிறோம்.

தேவன் நமக்குத் தந்த ஆத்துமா மூலம் அறிவு ஞானம் நமக்குக் கிடைக்கிறது. அறிவு உலகத்தோடு தொடர்பு கொள்கிறோம். இதனால் வேதத்தின் மகத்துவங்களை அறிந்து வேத வசனங்களின் அடிப்படையில் தேவ சித்தத்தை அறிகிறோம்.

தேவன் நமக்குத் தந்த சரீரத்தின் மூலம் இந்த மாம்சிக உலகத்தில் தொடர்பு கொள்கிறோம். அநேக பரிசுத்தவான்களின் வாழ்க்கையை நாம் கவனிக்கிறோம். அதின் மூலம் தேவ சித்தத்தை நாம் அறிகிறோம்.

உணர்வு சரீரத்தின் குரல்!
அறிவு ஆத்துமாவின் குரல்!
மனச்சாட்சியோ ஆவியின் குரலாயிருக்கிறது!

அநேகம் பேர் தங்கள் உணர்வுகளைப் பின்பற்றிப் போகிறார்கள். ஆனால் அது முற்றிலும் சார்ந்து கொள்ளக்

கூடியதல்ல. பாதிக்குப் பாதி வெற்றியும் தோல்வியும் அதில் கலந்திருக்கக் கூடும். மாம்சீக உணர்வுகள், பாச உணர்வுகள் அதில் கலந்து கொள்வதால் உணர்வின் மூலம் தேவ சித்தத்தைக் கவனிக்க இயலாது!

அப்படியே அறிவின் குரலும்கூட! ஏனெனில் கர்த்த ருடைய வழிகள் அறிவுக்கு அப்பாற்பட்டது. அவர் ஒரு கோலைக் கொண்டு சிவந்த சமுத்திரத்தைப் பிரிப்பார். ஆர்ப்பரிப்பின் சத்தத்தால் எரிகோவின் கோட்டையை விழச் செய்வார். கிதியோனின் முன்னூறு வீரரைக்கொண்டு கடற்கரை மணலத்தனையான மீதியானியரை அவர் முறி யடிப்பார். மனிதனுடைய ஞானம் தேவனுடைய பார்வை யில் பைத்தியமாய் இருக்கிறது. ஆகையால் மனுஷ ஞானத் தைக் கொண்டு தேவ சித்தத்தை அறிய இயலாது!

ஆனால் மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக் கிறது (நீதி 20:27) மனுஷனுடைய ஆவியில்தான் மனச் சாட்சி இயங்குகிறது! மனுஷனுடைய ஆவியோடுதான் பரிசுத்த ஆவியானவரும் இணைந்து செயல்படுகிறார்!

இயேசு சொன்னார், "சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான் 16:13). அவர் நம் ஆவியோடு இணைந்து, சத்தியம் என்ன? தேவ சித்தம் என்ன? என்று தெளிவாக போதித்தருளுவார்.

"பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றை யும் உங்களுக்குப் போதித்து, நான் சொன்ன எல்லாவற்றை யும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 15:26).

பரிசுத்தாவியானவரை ஏற்றுக் கொள்ளுங்கள். அவ ருக்குக் கட்டுப்பாடு விதித்தோ, தடை செய்தோ ஆவியை அவித்துப் போடாதிருங்கள். அந்த ஆவியானவரை உங்கள் மனச்சாட்சியின் குரலோடு இணைத்து விடுங்கள், அந்த ஆவி யானவரே உங்களை ஏவி எழுப்பி நடத்தட்டும்!

வேதம் சொல்கிறது. ''எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்'' (ரோ. 8:14)

ஒருபோதும் நாம் ஆண்டவருக்குப் போதிக்கிறவர்களாகவோ அல்லது ஆலோசனை சொல்லுகிறவர்களாகவோ இருக்கக் கூடாது! அநேகர் தங்கள் சுய சித்தத்தையும் தேவ சித்தத்தையும் மோத விடுகிறார்கள்!

வேதத்தில் லோத்துவைக் குறித்து வாசித்துப் பாருங்கள். கர்த்தர் அவனுக்கு தமது சித்தத்தை வெளிப்படுத்தி, ''உன் ஜீவன் தப்ப ஓடிப்போ; பின்னிட்டுப் பாராதே; இந்த சமபூமியெங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ'' என்றார்.

அதற்கு லோத்து சொன்ன பதில் என்ன தெரியுமா? ''அப்படி அல்ல, ஆண்டவரே...'' என்பதுதான்.

ஆண்டவருக்கு அறிவுரை சொன்ன அதிசய நீதிமான் அவன். தேவசித்தம் செய்யாத, ஆனால் பக்தியாயிருந்த ஒரு பக்திமான் அவன்.

''அப்படி அல்ல ஆண்டவரே...''

அவன் கண்கள் செழிப்பான நீர் நிலைகளுள்ள இடங்களை நோக்கியதே தவிர கர்த்தருடைய சித்தத்தை நோக்கவில்லை!

''அப்படி அல்ல, ஆண்டவரே...அதோ அந்த ஊர் இருக்கிறதே, நான் அங்கு ஓடிப் போகத் தக்கதாய் அது கிட்ட இருக்கிறது; சின்னதுமாய் இருக்கிறது'' என்றான்.

வைத்தியருக்கு ஆலோசனை சொல்லும் நோயாளி இருக்கலாம். ஆசிரியருக்கு அறிவுரை கூறும் மாணவர் இருக்கலாம். ஆனால் தேவசித்தத்தை மீறி தேவனுக்கு தன் சுய ஞானத்தைக் கூறும் விசுவாசிகள் ஒருபோதும் இருக்கக் கூடாது. ''அப்படி அல்ல ஆண்டவரே'' என்று கூறிய லோத்தின் குடும்பம் வீணான சாபத்திற்குள்ளானது. அவன் மனைவி உப்புத் தூண் ஆனாள், அவன் பெண் பிள்ளைகள்

சரிக்கப்பட்ட சந்ததியைப் பெற்றெடுத்தார்கள், தேவ பிள்ளையே, அரை குறை தேவ சித்தமல்ல; உன் சுய ஞானம் மேற்கொண்ட தேவசித்தமுமல்ல; பரிபூரணமான தேவ சித்தம் உன்னில் நிறைவேறட்டும்!

ஆவியானவர் நம்மை தேவ சித்தத்தின்படி நடத்துவதை நாம் நன்ருக அறிந்து கொள்ள முடியும். ''ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சாட்சியிடுகிருர்'' (ரோமர் 8:15).

ஆவியானவர் எப்படி தேவ சித்தத்தை வெளிப்படுத்து கிருர் என்பதையும், ஆதி அப்போஸ்தலர் அதை எப்படி ஏற்றுக் கொண்டார்கள் என்பதையும் அப். 13:7-ல் வாசிக்கலாம்.

''அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித் துக் கொண்டிருக்கிறபோது, பர்னபாவையும் பவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்காக, அவர்களைப் பிரித்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினுர். அப்பொழுது உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை அனுப்பினுர்கள்.

அப்படியே அவர்கள் ஆவியினுல் அனுப்பப்பட்டு...... போனுர்கள்" (அப் 13:2-4).

எத்தனை அருமையான வழி நடத்துதல் பாருங்கள். ஆவியானவர் திருவுளம் பற்றினுர் ... ஆவியானவர் அனுப் பினுர்! ஆம் இன்னும் கர்த்தர் நம்மை தமது தூய ஆவியால் வழி நடத்துகிருர்!

அவர் நடத்துகிறவர் மட்டுமல்ல, சில வேளைகளில் நம் சுய சித்தத்தின்படி செய்யாமல் தடுக்கிறவரும் கூட! கர்த்த ருடைய சித்தமான நேரம், காலம் நிறைவேருமல், நாம் செல்லும்போது ஆவியானவர் நம்மைத் தடை செய்கிருர்.

அப் 16:6, 7-ஐ வாசித்துப் பாருங்கள்: ''பரிசுத்த ஆவி யாலே தடை பண்ணப்பட்டு...'' (அப் 16:6). ''ஆவியான

வரோ, அவர்களைப் போகவொட்டாதிருந்தார்"

(அப் 16:7)

சிலர் ஆவியானவரிடம் சவால் விடுகிறார்கள், "நான் சினிமாவுக்குச் செல்வது கர்த்தருக்குச் சித்தமில்லாவிட்டால் ஆவியானவர் என் சைக்கிளைப் பஞ்சராக்கிப் போடட்டும், அல்லது தியேட்டரில் மின்சாரம் இல்லாமற் போகும்படி ஆவியானவர் தடை செய்யட்டும்" என்கிறார்கள். நீ துணிகரமாய் பாவத்திற்குள் செல்லும்போது ஆவியானவர் உன்னை தடுத்த நிறுத்த வேண்டிய அவசியமே இல்லை! நரகத்திற்குப் போகட்டும் என்று விட்டு விடுவாரானால் உன் நிலை என்ன? உண்மையாகவே உன் வழிகள் முற்றிலும் ஆவியானவருக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்குமானால், அவர் உன்னைக் கொண்டு செல்லும் பாதைகளும் தேவ சித்தத்தின் படியாகவே இருக்கும்! அவர் ஏவுவார், நடத்துவார். பாதை மாறினால் தடுத்துவிடுவார்.

வேதம் சொல்கிறது. "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது — அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது" (1 யோ 2:27).

அத்தியாயம் 6

தரிசனங்கள்!

''கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்"
(எண் 12:6).

தேவன் தரிசனங்கள் மூலமாகவும் தமது சித்தத்தை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் அவ்விதமாக விசுவாசிகளுக்கும், ஊழியர்களுக்கும் புற ஜாதி மக்களுக்கும், தேவனை அறியாத ராஜாக்களுக்கும் கூட தமது சித்தத்தையும் பிற்காலத்திலே சம்பவிக்கப்போகும் காரியங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறார்! அல்லேலூயா!

''அங்கே ராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று"' (அப். 16:9).

அப்போஸ்தலனாகிய பவுல் கண்ட தரிசனத்தில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து, எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது. அந்த தரிசனத்தை அவன் கண்டபோது அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படி எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினோம் என்று எழுதுகிறார் (அப். 16:9, 10).

தரிசனத்தைக் கண்ட அப்போஸ்தலனாகிய பவுல், உடனே அதின் அர்த்தத்தையும் தேவ வழி நடத்துதலையும் அறிந்து கொண்டார்.

தரிசனங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தூங்கும்போது வரும் தரிசனங்கள்.
2. ஜெபிக்கும் போது வரும் தரிசனங்கள்.
3. ஆவிக்குள்ளாகும் போது வரும் தரிசனங்கள்.
4. கண்கள் திறந்திருக்கும் போது வரும் தரிசனங்கள்.

1. தூங்கும்போது வரும் தரிசனங்கள்:-

கர்த்தர் நாம் தூங்கி இளைப்பாறும்போது பல வேளைகளில் சொப்பனங்கள் மூலமாகவும், தரிசனங்கள் மூலமாகவும் தமது சித்தத்தைத் தெரியப்படுத்துகிறார். பெரும்பாலான மக்கள் இவ்விதமாக கர்த்தருடைய தரிசனத்தை பெறுகிறார்கள்.

பார்வோன், ஒரு புறஜாதி ராஜாவாயிருந்த போதிலும் கர்த்தர் அவனுக்கு தம் சித்தத்தை அவன் தூங்கும்போது சொப்பனத்தின் மூலம் உணர்த்தினார்.

அந்த சொப்பனத்தில் கர்த்தர் செழுமையான ஏழு பசுக்களைக் காண்பித்தார். அவைகள் நதியிலிருந்து ஏறி வந்து புல் மேய்ந்தது. பின்னால், அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் வந்து முந்திய பசுக்களை விழுங்கிப் போட்டன.

இரண்டாம் விசையும் பார்வோன் சொப்பனங்களைக் கண்டான். நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்தது. பின்பு சாவியானதும், கீழ்க்காற்றினால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளைத்து, நிறைமேனியான ஏழு கதிர்களையும் விழுங்கிப் போட்டது

(ஆதி 41:1-7).

அதன் அர்த்தத்தை யோசேப்பு பார்வோனுக்கு கூறிய போது, எகிப்தில் வரப்போகிற ஏழு ஆண்டுகால செழுமையான வருடங்களையும், அதைத் தொடர்ந்து வரவிருக்கிற வறட்சியையும் பஞ்சத்தையும் கர்த்தர் வெளிப்படுத்தியிருக்கிறார் என்று விளக்கினான்.

கர்த்தர் ஏற்ற வேளையில் கொடுத்த இந்த தரிசனம் எகிப்து தேசத்தையும் தேவனுடைய ஜனங்களையும் பாதுகாத்தது.

இதுபோலவே கர்த்தர் நேபுகாத் நேச்சாருக்குச் சொப்பனத்தில் வரும் காலங்களைக் குறித்து அறிவித்தார் என்று

தானியேல் தீர்க்கதரிசியின் புத்தகம் இரண்டாம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

"இனி மேல் சம்பவிக்கப் போகிறது என்ன?" என்ற எண்ணத்துடன் நித்திரைக்குச் சென்ற அந்த பாபிலோன் தேசத்து ராஜாவுக்கு, கர்த்தர் தன்னுடைய வருகை பரியந்தம் உள்ள நீண்டகால சம்பவங்களை ஒரு பெரிய சிலையின் தரிசனத்தில் மூலமாக அழகாக விவரித்தார்.

சொப்பனங்களும் தரிசனங்களும் கர்த்தருடைய சித்தத்தையும் வரும் காலத்தையும் குறித்து நமக்கு விளக்குகிறது. ஒவ்வொருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் இதை நாம் அறிந்திருக்கக்கூடும். ஆகவே, அதை அதிகமாக விளக்கி விவரிக்க விரும்பவில்லை.

2. ஜெபிக்கும் போது வரும் தரிசனம்:-

நாம் முழு இருதயத்தோடும் ஆண்டவரை நோக்கி ஜெபிக்கும் போது கர்த்தர் ஜெப நேரத்திலே தரிசனங்கள் மூலமாக நம்மோடு கூடப் பேசுகிறார்.

ஒருமுறை நான் வெளிதேசத்திற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த போது அரசாங்கம் என்னை தடுத்தது. லீவு கொடுக்க மறுத்தது. அப்போது நானும் கர்த்தருடைய ஊழியக்காரரான டாக்டர் கிளிபோர்ட் குமார் அவர்களும் உபவாசித்து ஜெபித்தோம். அப்போது தேவன் அவருக்கு தரிசனத்தில் கர்த்தர் என்னைக் கொண்டு போக சித்தம் கொண்டதையும் எந்த விமானத்தில் போய் இறங்குவேன் என்பதையும் நான் அந்த தேசத்திலே யார் யாரை சந்திக்கப் போகிறேன் என்கிற காரியங்களையும் திட்டமும் தெளிவுமாக தரிசனத்தின் மூலமாக வெளிப்படுத்தினார். அவர் சொன்ன ஒவ்வொரு காரியங்களும் மிக துல்லியமாக மிக சரியாக நிறைவேறினது.

அதுபோலவே, இன்னொரு முறை என் ஊழியத்தில் மிக போராட்டங்கள் வந்தபோது நானும் இன்னொரு ஊழியருமாக ஜெபித்தோம். அப்போது கர்த்தர், தமது பிரகாசமான

காரத்தில் என்னை பிரிய உருவமாக சந்திக்கிறதை அந்த ஊழியருக்குத் தெளிவாக காண்பித்தார். அந்த கைகள் என்னை அரவணைத்துக் கொண்டது. அந்த கைகள் என்னை பாதுகாத்தது. கர்த்தர் அந்த தரிசனத்தின்படியே அருமையாய் என்னை நடத்தினார்.

ஜெப வேளைகளில் கர்த்தர் தரிசனத்தின் மூலமாக தன்னுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார் என்பதற்கு வேதத்தில் அநேக ஆதாரங்கள் உண்டு.

கொர்நேலியு என்று சொல்லப்பட்ட பக்திமான் செசரியா என்ற பட்டணத்திலே ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் கர்த்தர் அவனுக்குத் தரிசனத்தைக் கொடுத்தார். அந்த தரிசனத்திலே தேவதூதன் இறங்கி வந்தான். கொர்நேலியுவே என்று பெயர் சொல்லி அழைத்தான். "நீ யோப்பா பட்டணத்திற்கு மனுஷரை அனுப்பி பேதுரு என்ற மறுபெயர் கொண்ட சீமோனை அழைப்பி; அவன் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் தங்கியிருக்கிறான். அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது; நீ செய்ய வேண்டியதை அவன் உனக்குச் சொல்வான்" என்றான் (அப் 10:3-6).

கொர்நேலியு பக்தியுள்ளவன் தான். ஆனால் இரட்சிப்பைப் பற்றியோ ஆவியின் வரங்களைக் குறித்தோ அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஆகவே, தேவன் அவனுடைய பக்தியைக் கண்டு அவனுடைய ஜெபத்தைக் கேட்டு, தரிசனம் கொடுக்கச் சித்தமுள்ளவராக இருந்தார்.

ஜெப நேரத்தில் ஆண்டவர் தன்னோடு கூட பேச வேண்டும், தேவ சித்தத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று வாஞ்சிக்கிறவர்களுக்கு இவ்விதமாக தேவன் தன்னுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார்.

சிலர் 5 நிமிட ஜெபத்தில் 5 மணி நேரம் தூங்கி ஐந்தாயிரம் சொப்பனங்களைக் கண்டு விடுகிறார்கள். மட்டுமல்ல, அவையெல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு ஊழியர்களிடம் வந்து இவைகளுக்கு உடனே அர்த்தம் சொல்லும்

கள் என்று உயிரை வாங்கிவிடுகிறுர்கள். அதுவல்ல தரிசனம்.

நீ பாரத்தோடும் கண்ணீரோடும் மிகுந்த வாஞ்சையோடும் "ஆண்டவரே, நான் செய்ய வேண்டியதை எனக்கு அறிவியும்" என்று மன்றுடும்போது நிச்சயமாகவே ஆண்டவர் தரிசனத்தில் உன்னேடுகூட பேசுவார்.

3. **ஆவிக்குள்ளாகும்போது வரும் தரிசனங்கள்:-**

அப்போஸ்தலனுகிய யோவான் பத்மு தீவிலிருக்கும்போது ஆவிக்குள்ளாகி பரலோக தரிசனங்களையெல்லாம் கண்டான். அந்த தரிசனங்கள்தான் வேதத்திலே வெளிப்படுத்தின விசேஷமாக இடம் பெற்றிருக்கிறது.

யோவான் தன் அனுபவத்தைச் சொல்லும்போது கர்த்தருடைய நாளில் நான் ஆவிக்குள்ளானேன் என்று குறிப்பிடுகிறுர் (வெளி 1:10). இது எவ்வளவு ஒரு மேன்மையான அனுபவம்!

சிலருககு பரலோகத்தின் காட்சிகளை பூமியில் கொண்டு வந்து காண்பிப்பார். இன்னும் சிலரையோ அவர் ஆவிக்குள்ளாக்கி அவர்களைப் பரலோகத்திற்கு கொண்டு போய் பரலோக காட்சிகளை அவர்களுக்குக் காண்பிப்பார் கர்த்தா யோவானுக்கு அவ்விதமாக பரலோகததின் காட்சிகளையெல்லாம் அருமையாக வெளிப்படுத்திக் காண்பித்தார். முதலாவதாக, அவனுடைய கண்கள் கிறிஸ்துவைக் கண்டது, ஏழு நட்சத்திரங்களை தன்னுடைய கைகளில் ஏந்தினவராய் ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் உலாவுகிறவராய் அவரைத் தரிசித்தான். பின்பு ஆண்டவர் ஏழு சபைகளுக்குச் சொல்ல வேண்டிய காரியங்களையெல்லாம் தரிசனத்தில் அவனுக்கு வெளிப்படுத்திக் கொடுததார். வெளிபபடுத்தல் 4:2-ல் மீண்டும் யோவான் ஆவிககுள்ளானதை வாசிக்கிறோம். அப்போது பரலோகத்தின் சிங்காசனங்களையும் அங்கேயிருக்கிற நான்கு ஜீவன்கள் இருபத்து நான்கு மூப்பர்களையும் அவர்கள் தேவனை ஆராதிக்கிற விதங்களையும் கவனித்து எழுதினர்.

யோவான் அன்று கண்ட தரிசனங்களெல்லாம் எழுத்து வடிவமானபடியினால் இன்றைக்கும் அது நமக்குப் பிரயோஜனமாக இருக்கிறது. பரலோக ராஜ்யத்திற்கு சென்று சேரவும், வருகையில் காணப்படவும் அந்த தரிசனங்கள் நம்மை ஏவி எழுப்புகிறதாக இருக்கிறது!

அதுபோலவே எசேக்கியேலை கர்த்தர் ஆவிக்குள்ளாக்கி தரிசனங்களை கொடுத்தார். இந்த தரிசனம் இஸ்ரவேல் ஜனங்களுடைய அன்றைய நிலைக்கு ஒரு அடையாளமாக இருந்தது. எசேக்கியல் 37 ஆம் அதிகாரத்தை வாசிக்கும் போது உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கின் நடுவே கர்த்தர் அந்த தரிசனத்தில் எசேக்கியேலைக் கொண்டு போய் நிறுத்தினார். ஆத்தும பாரமற்றிருந்த அந்த தீர்க்க தரிசிக்கு கர்த்தர் அந்த தரிசனத்தின் மூலமாக உலர்ந்த எலும்புகளாகிய இஸ்ரவேலர் உயிர்ப்பிக்கப்படும் வழியின் ரகசியத்தைப் போதிக்க சித்தங் கொண்டார். அந்த தரிசனம் வேதத்தில் இடம் பெற்றது மட்டுமல்ல, இன்றைக்கும் உலர்ந்து போய் கிடக்கிற நமது திருச்சபைகளை, நமது தேசத்தை தேவ ஆவியினால் உயிர்ப்பிக்கும் வழியை நமக்கு போதிக்கிறதாக இருக்கிறது.

ஆவிக்குள்ளாக்கி தேவன் கொடுக்கும் தரிசனங்கள் ஒரு தனிப்பட்ட மனுஷனுக்கு தேவனுடைய சித்தத்தை மாத்திரமல்லாமல் முழு விசுவாசிகளுக்கும், உலகத்திற்கும் தேவன் அறிவிக்கிற பாடங்களாகவும் அமைந்திருக்கின்றன.

4. கண்கள் திறந்து கொண்டிருக்கும்போதே வரும் தரிசனம்:-

சிலருக்கு கர்த்தர் தரிசனத்தின் வரங்களைக் கொடுத்திருக்கிறார். உங்கள் வாலிபர்கள் தரிசனங்களைக் காண்பார்கள் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தமல்லவா?

ஒரு கேன்சர் வியாதி உள்ள பெண்ணை ஜெபிக்கும்படி ஒரு ஊழியரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவளுடைய நுரையீரலெல்லாம் கேன்சரினால் அரிக்கப்பட்டு முற்றிலும் பழுதடைந்து போய் இருந்தது. டாக்டர்கள் அவள் இறந்து விடுவாளென்று மரண நாளையும் நிச்சயித்து விட்டார்கள்.

அவள் ஊழியரைத் தேடி வந்து கொண்டிருக்கும் போதே அந்த ஊழியர் நேருக்கு நேராய் தரிசனத்தில் அவ ளுடைய நுரையீரலைக் கண்டார். ஒரு குட்டி பிசாசு அந்த நுரையீரலில் தொங்கிக் கொண்டிருந்தது. எத்தனையோ மக்கள் அந்த இடத்தில் கூடி இருந்தாலும் அந்த ஊழிய ருக்கு மட்டுமே அழுகிப் போன அந்த நுரையீரலும் அந்த நுரையீரலில் தொங்கிக்கொண்டிருக்கிற அந்த பிசாசும் தெரிந்தது.

ஆகவே, அவர் உடனே அந்த பிசாசை அதட்டி, இயேசுவின் நாமத்தில் இந்த சரீரத்தை விட்டு வெளியேறும் படி கட்டளையிடுகிறேன் என்று உத்தரவிட்டார். அது மாட் டேன் என்பதுபோல தலையை அசைத்தது. அவரோ விட வில்லை. கிறிஸ்து அவளுக்காக இரத்தம் சிந்தி மரித்திருக்கும் போது, இவளுக்காக தன்னுடைய கைகளிலும் கால்களிலும் ஆணிகள் கடாவப்பட்டிருக்கும்போது, நீ இவளை வேதனைப் படுத்திக்கொண்டிருப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது. இப்போதும் நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தை தெளிக்கிறேன் என்று சொன்னார். அதைக் கேட்டவுடனே அந்த குட்டி பிசாசு நடுநடுங்கினது. அந்த நுரையீரலி லிருந்து கீழே குதித்தது. வேகமாய் ஓடிப்போனது. அந்த நிமிடமே அந்த சகோதரி பரிபூரணமான குணமடைந்தாள்.

இந்த தரிசன வரம் விசேஷமானது. இந்த தரிசன வரம் உள்ளவர்கள் ஒரு மனுஷன் அருகே வரும்போதே அவனுடைய ஆவிக்குரிய நிலவரம் என்ன? ஜெப ஜீவியம் எப்படியிருக்கிறது? சாத்தானுக்கு அவன் எந்த அளவுக்கு இடம் கொடுத்திருக்கிறான்? என்பதையெல்லாம் ஒரு படக் காட்சிபோல தரிசனத்தில் கண்டு அறிந்து கொள்கிறார்கள். இந்த தரிசனம் விசேஷமானது. தன்னுடைய பிள்ளைகளுக்கு தரிசனத்தைத் தருவேன் என்று சொல்கிறவர் நிச்சயமாகவே அந்த தரிசனத்தை உங்களுக்கும் தந்தருள்வார்.

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களெல்லாம் அடிக்கடி ஆண்டவரை தரிசனத்தில் தரிசித்தார்கள். வருங்காலத்தை

தரிசனத்திலே அறிந்து கொண்டார்கள். எண்ணாகமம் 12:6 சொல்கிறது: கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்.

வேதத்தின் பல பகுதிகளை வாசித்துப் பாருங்கள். கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி (ஆதி 12:7) ஈசாக்குக்கு தரிசனமாகி (ஆதி 26:2) யாக்கோபுக்கு தரிசனமாகி (ஆதி 35:1) மோசேக்கு முட்செடியில் தரிசனமாகி (யாத் 3:2) கிதியோனுக்கு கர்த்தர் தரிசனமாகி (நியாயாதிபதிகள் 6:12) சாலோமோனுக்கு தரிசனமாகி (I இராஜா 3:2) என்று பல இடங்களில் திரும்ப திரும்ப வந்து கொண்டேயிருக்கிறது. கர்த்தர் அவ்வப்போது தரிசனத்தில் தோன்றி தம்முடைய சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

வாவீது ராஜா சொல்கிறார்: நானோ நீதியில் உமது முகத்தை தரிசிப்பேன் சங் 17:15. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக, நீதியுள்ளவர்களாக இருக்கிறவர்கள் நிச்சயமாகவே கர்த்தரை தரிசிப்பார்கள். தேவபிள்ளையே, கர்த்தர் உன்னோடு தரிசனத்தில் பேசும்படி கேள், அவர் உன்னோடு பேசுவார்.

சில எச்சரிப்புகள்:-

தரிசனத்தின் மூலம் தேவன் எவ்விதமாய் தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துவார் என்பதை நாம் கண்டோம். என்றாலும் சில வேளைகளில் வஞ்சிக்கிற சாத்தான் வஞ்சகமாக சிந்தனைகளில் புகுந்து பொய்யான தரிசனங்களைக் கொண்டுவந்து விடக்கூடும். சிலர் உண்மையாகவே ஏமாந்துவிடுகிறார்கள். சிலர் தங்கள் பெயர் புகழுக்காக தரிசனம் காண்பதாக டமாரம் அடித்து மற்றவர்களை ஏமாற்றுகிறார்கள்.

ஒருவர் தான் கண்ட ஏராளமான தரிசனங்களை ஒரு புத்தகமாக வெளியிட்டிருந்தார். அதை நான் வாசித்த

போது மிகுந்த வேதனையடைந்தேன். காரணம், அந்த தரிசனங்களில் பெரும்பாலானவைகள் வேத வசனத்திற்கு முரண்பாடாகவும், சுய ஞானத்தில் எழுதப்பட்டதாகவும் இருந்ததைக் கண்டேன்.

ஒருவர் தரிசனம் கண்டதாகச் சொன்னார். என்னவெனில், பரலோகத்தில் பரிசுத்தவான்கள் அடிக்கப்படுவதாகவும் அவர்களுடைய இரத்தம் பரலோகத்தின் வீதிகளிலே ஒடுவதாகவும், ஏன் என்று அருகிலிருந்த தேவ தூதனைக் கேட்டபோது, அவர்கள் பூமியில் இரத்த சாட்சிகளாக மரிக்கிற பரிசுத்தவான்களுக்கு நிழலாட்டமாக இருக்கிறதாகவும் விளக்கியிருந்தார்.

இதை வாசித்தபோது, இது வேதத்திற்கு ஒவ்வாததாக இருக்கக் கண்டேன். ஏனெனில், வேதம், மாம்சமும் இரத்தமும் பரலோக ராஜயத்தை சுதந்தரித்து கொள்வதில்லை என்று தெளிவாய் சொல்லியிருக்கிறது.

மட்டுமல்ல, பரலோகத்தில் கண்ணீர் இல்லை கவலையில்லை, அலறுதலில்லை என்றும் வாசிக்கிறோம். இப்படியிருக்க பரலோகத்தில் பரிசுத்தவான்கள் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்துகிறார்கள் என்றால்அது வேதத்திலுள்ள பரலோகமல்ல. அது சாத்தான் காண்பிக்கிற பொய்யான தரிசனம்.

இன்னும், சிலர் தாங்கள் வாரத்திற்கு எழுபது தடவைகள் பரலோகத்திற்கு போய்விட்டு வருவதாவும், பரலோகத்தில் தாங்கள் குளிப்பதற்கு சாது சுந்தர்சிங் தண்ணீர் ஊற்றினதாகவும்,தேவ குமாரனாகிய இயேசு அழுக்குதேய்த்துவிட்டதாகவும் சரமாரியாக சரடுவிடுகிறார்கள். அவர்களெல்லாம் வரும்காலத்தில் கர்த்தருடைய கோபக்கினைக்கு முன்பாக எப்படி நிற்பார்கள் என்று தெரியவில்லை.

துணிகரமான பாவங்களுக்குஉன்னை ஒருபோதும் விற்றுப் போடாதே. இப்படி பொய்தரிசனம் கண்டு கிடைக்கிற பேரும் புகழும் உனக்கு வேண்டாம்.

தரிசனங்கள் காணும்போது உன்னுடைய உள்ளுணர்வில் இயேசு கிறிஸ்வின் இரத்தம், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் என்று சொல்லிக்கொண்டிரு. கிறிஸ்துவின் இரத்தத்தால் வடிகட்டப்பட்ட தரிசனங்களே தொடர்ந்து வரட்டும். கர்த்தர் தரிசனங்கள் கொடுத்தாரானால் உள்ளத்தில் ஒரு களிகூருதல் உண்டாகும்; எல்லாவற்றிற்கும் மேலாக அந்த தரிசனங்கள் வேத வசனத்தின்படியாக இருக்கும்.

ஒருமுறை நான் கூட்டங்கள் நடத்தியபோது, ஒரு சகோதரி எழுந்து நின்று, இயேசு சிறு குழந்தையாய் யோர்தான் நதியில் விளையாடிக் கொண்டிப்பதாக தரிசனம் கூறினார்கள். அதைக் கேட்டவுடனே அது பிசாசு கொடுக்கிற தரிசனம் என்று உடனே உணர்ந்து கொண்டேன். வேதத்தில் இயேசு சிறு பிள்ளையாய் நாசரேத்தில் வளர்ந்தார் என்று வாசிக்கிறோம். அவர் 30 வயதுடையவராக இருந்தபோதுதான் யோர்தானுக்கு ஞானஸ்நானம் பெற வந்தார்.

தரிசனம் கூறின அந்த சகோதரியின் தலையில் கைவைத்து ஜெபித்தேன். உள்ளே இருந்த பிசாசு ஆடிக்கொண்டு தொப்பென்று கீழ விழுந்தது. உடனே நான், இது வஞ்சிக்கிற ஆவியின் தந்திரமென்று உணர்ந்துகொண்டேன். தேவ பிள்ளையே, நீ தரிசனம் காண்கிறது மாத்திரமல்ல, அதுபோல தரிசனங்களை அடையாளம் கண்டு கொள்கிற கிருபைகளையும் நீ தேவனிடத்திலிருந்து கேட்டுப் பெற்றுக்கொள்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக.

அத்தியாயம் 6

வசனம் வழி காட்டும்!

"அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபிரெயர் 12:11).

தேவசித்தத்தைச் செய்ய பயிற்சி செய்யுங்கள். அதில் பழகுங்கள். நிச்சயமாகவே அது உங்களுக்கு தெய்வீகமான சமாதான பலனைத் தரும்.

இரட்சிக்கப்பட்ட ஆரம்ப நாட்களில் கர்த்தர் மிக அழகாக தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துவார். தரிசனங்கள் மூலம் நம்மோடு பேசுவார். தம்முடைய மெல்லிய குரலினால் நம்மோடுகூட சம்பாஷித்து, மிகவும் அழகாக நம்மை வழி நடத்திக் கொண்டே வருவார்.

ஆனால் ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் வளர வளர நாமாக தேவ சித்தத்தைக் கண்டு பழகி அதை அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். குழந்தையாக இருக்கும்போது அதை ஓயாமல் தூக்கி வைத்துக் கொள்ளும் பெற்றோர், வளரும்போது அதுவாகவே நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லையா? குஞ்சுகளுக்கு இரை ஊட்டுகிற தாய், அந்த குஞ்சுகள் வளர்ந்ததும் தானாக இரை தேடிக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பதில்லையா? அப்படியே நாமும் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

சீன உள்நாட்டு மிஷன் ஸ்தாபகரான ஹட்சன் டெய்லர் சொன்னார், "இளமையில் உடனுக்குடன் தேவ வழி நடத்துதல் தெளிவாகவும் திட்டமாகவும் கிடைத்துவிடும்? ஆனால் தேவன் என்னை அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்தபின், மூடுபனி நிறைந்த வழியின் ஊடே நடப்பதைப் போல இருக்கிறது" என்றார்.

நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர வளர வேத வாக்கியங்களில் வேரூன்ற வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். கர்த்தருடைய வசனங்கள் மூலமாக நமக்குப் போதிக்கிறார். அவைகளே நம்மை எளிதாகவும் ஒழுங்காகவும் செம்மையாகவும் வழிநடத்திச் செல்கின்றன.

எப்படிப்பட்ட சூழ்நிலையானாலும் சரி, அந்த சூழ்நிலைக்கேற்ப நமக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அருமையான வேத வசனங்கள் வேத புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. வேதத்தில் உள்ள பக்தர்களுடைய வாழ்க்கை வரலாறு நமக்கு வழி காட்டும் தூணாக நின்று நம்மை வழி நடத்துகிறது, எச்சரிக்கிறது, ஆறுதல்படுத்துகிறது. முன்னேறிச் செல்ல உற்சாகப்படுத்துகிறது.

1. வசனம் வழி காட்டும்:-

"உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது" (சங். 119:105).

நாம் எவ்வளவுக்கெவ்வளவு வேதத்தை விரும்பி வாசிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவாய் தேவ ஆலோசனைகளை பெற்று கர்த்தரால் நடத்தப்படுவோம். ஏனெனில் வேதத்தில் ஒவ்வொரு வசனமும் ஆவியானவரால் எழுதப்பட்டிருக்கிறது!

அநேகர் கர்த்தருடைய சித்தத்தை அறிய திடீரென்று வேதத்தைத் திறப்பார்கள். கண்களை மூடிக்கொண்டு தங்கள் விரலால் ஒரு வசனத்தைத் தொடுவார்கள். பின்பு அதை வாசித்து அதையே தேவ சித்தமாக நினைப்பார்கள். வேத புத்தகத்தோடு சூதாடி, குறி கேட்க வேண்டாம்.

ஒரு பழங்கால கதை உண்டு. ஒருவன் தேவ சித்தத்தை அறிய கண்களை மூடி வேதத்தைத் திறந்து ஒரு வசனத்தைத் தொட்டான். அங்கே யூதாஸ் நான்று கொண்டு செத்தான் (மத். 27:3) என்று எழுதப்பட்டிருந்தது. மனம் கலங்கிய அவன், மீண்டும் வேறு ஒரு வசனம் எடுப்பேன் என்று வேதத்தைத்திறந்தான். "நீயும் போய் அந்தப்படியே செய்"

(லூக். 10:37) என்ற வசனம் தென்பட்டது. மீண்டும் வேதத்தை மூடித் திறந்தான். "நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்" (யோவான் 23:27) என்ற வாசகத்தைக் கண்டான். அவன் அடைந்த அதிர்ச்சிக்கு அளவே இல்லை! ஆண்டவரை பரீட்சை பார்க்கலாமா? வேண்டாம்!

வேதத்தை நிதானமாக தியானத்தோடு வாசிக்கும்போது கர்த்தர் மெல்லிய குரலில் உன் உள்ளத்தோடு பேசுவார். வேதத்திலுள்ள பரிசுத்தவான்களின் முன் மாதிரியான வாழ்க்கை, உனக்கு வழிகாட்டும். வேதத்தின் பல பகுதிகளை வாசித்து உன் இருதயத்தில் அவைகளை சேமித்துவை. உண்மையாகவே, வேதம் உன் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கும்!

கட்டளையே விளக்கு; வேதமே வெளிச்சம்; போதகசிட்சையே ஜீவ வழி (நீதி. 6:23).

வேத வசனங்களிலிருந்து இரண்டு வகையான தேவ சித்தங்களை நாம் அறிந்து கொள்கிறோம்.

1. எல்லாருக்கும் பொதுவான தேவசித்தம்.

2. தனிப்பட்ட வாழ்க்கையில் உள்ள குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கான தேவனுடைய சித்தம்.

1. எல்லாருக்கும் பொதுவான தேவனுடைய சித்தம்:-

எல்லாருக்கும் பொதுவான தேவனுடைய சித்தங்களைக் குறித்து வேதத்தில் பல இடங்களில் நாம் தொடர்ந்து வாசிக்கிறோம். இது திட்டவட்டமான, நிச்சயமான தேவ சித்தங்கள். அதை மேலும் தேவனுக்குச் சித்தமா என்று நாம் அறிய வேண்டிய அவசியமில்லை.

a. "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்" (I தீமோ 2:4).

இந்த வசனத்தை சற்று தியானித்துப் பாருங்கள், இதை வாசிக்கும்போது நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டியது

தேவனுடைய சித்தம் என்று அறிந்துக் கொள்ளலாம் உங்கள் மனைவி, அல்லது உங்கள் கணவனுர், உங்கள் பிள்ளைகள் யாவரும் இரட்சிக்கப்படுவது தேவனுடைய சித்தம் தான். அதற்காகத்தானே தேவனுடைய குமாரனுகிய இயேசு பூமியிலே வந்தார்? அதற்காகத்தானே இரத்தம் சிந்தி மரித்தார்? அதற்காகத்தானே அடக்கம் பண்ணப் பட்டு உயிரோடு எழுந்தார்?

அவர் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட சித்தமுள்ள வராக இருக்கிருர் என்று வேதம் தெளிவாய் கூறும்போது, நீ தனியாக' "நான் இரட்சிக்கப்படுவது தேவனுடைய சித்தமா? என்று கேட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

சிலர் சாக்குப்போக்காகச் சொல்லும்போது, தேவன் தமக்குப் பிரியமான நேரத்தில், அவருக்குச் சித்தமான காலத்தில் என்னை இரட்சிப்பார் என்று சொல்லி நைசாக நழுவிப் போகிருர்கள். ஆனுல் வேதம் இன்றைக்கே இரட்சண்ய நாள்: இதுவே அநுக்கிரக காலம் என்று திட்டமும் தெளிவுமாய்க் கூறியிருக்கிறது. ஆகவே, இரட்சிப்பைத் தள்ளிப்போடுவது தேவனுடைய சித்தமல்ல!

இன்னும் சிலர், கர்த்தருக்குச் சித்தமாயிருந்தால் தானே என்னுடைய அப்பா இரட்சிக்கப்படுவார்? கர்த்தர் கிருபை செய்தால்தானே என் அண்ணன் இரட்சிக்கப்படுவான் என் றெல்லாம் குழம்பிக்கொண்டிருக்கிருர்கள். அப்படியெல்லாம் குழம்ப வேண்டிய அவசியமில்லை. அவர்கள் இரட்சிக்கப் படுவது தேவனுடைய சித்தம். "கர்த்தராகிய இயேசுவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவீர்கள்" (அப். 16:31) என்ற இந்த வசனத்தை நீங்கள் விசுவாசித்து உறுதியாய் ஜெபிப்பீர்கள் என்ருல் நிச்சயமா கவே உங்கள் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள்.

b. "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டு மென்பதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது" (I தெச 4:3).

பரிசுத்தமான ஜீவியத்திற்கு விரோதமாக நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் தேவனுக்குச் சித்தமல்ல என்பதை உணர்ந்துகொள்ளலாம். சிலர் நாங்கள் இரவு நடனத்திற்கு போகிறேம், சினிமாவிற்குப் போகிறேம். இது தேவ சித்தமா? அறிந்து சொல்லுங்கள் என்று கேட்டால், கண்ணை மூடிக்கொண்டு அது தேவனுடைய சித்தமில்லை என்று சொல்லிவிடலாம்.

தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறர். அவர் பரிசுத்தராக இருக்கிறது போல நாமும் பரிசுத்தராக வேண்டுமென்று எதிர்பார்க்கிறர். பரிசுத்த அலங்காரத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் என்று வேதம் சொல்லுகிறது. இப்படியிருக்க, பரிசுத்தத்திற்கு விரோதமாக செயல்படுகிற ஒவ்வொரு செயல்களும் தேவனுடைய சித்தத்திற்கு எதிரானது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

c. ''எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்படி செய்வதே கிறிஸ்து இயேசுவிற்குள் உங்களைக் குறித்த தேவனுடைய சித்தமாக இருக்கிறது''

(I தெசலோனிக்கேயர் 5:18).

ஓயாமல் ஆண்டவரை ஸ்தோத்தரித்து கொண்டிருப்பது தேவனுடைய சித்தமா? தொடர்ந்து துதித்துக் கொண்டிருந்தால் அவர் எரிச்சலடைய மாட்டாரா? என்று சிலர் கேட்கிறர்கள்.

ஆனல் நாம் அப்படி செய்வது தான் தேவனுடைய சித்தம் என்று வேத வாக்கியங்கள் மூலம் தெளிவாகக் காணலாம். நம்முடைய தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர். பரலோகம் முழுவதும் துதியினல் நிரம்பியிருக்கிறது. எல்லா தேவ தூதர்களும், கேருபீன்களும் சேராபீன்களும் அவரை இடவிடைாமல் துதித்துக்கொண்டே இருக்கிறர்கள். அப்படியிருக்க, ஓயாத துதி ஒருபோதும் அவரை எரிச்சல் மூட்டுவதில்லை. மட்டுமல்ல, கர்த்தர் நம்மைக் குறித்து ஒரு எதிர்பார்ப்போடு கூட,

"இந்த ஜனத்தை நான் எனக்கென்று ஏற்படுத்தினேன்; அவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள்" என்றார்.

சில மாதங்களுக்கு முன்பு ஒருவர் என்னிடத்தில் வந்து சகோதரனே, பிதாவை துதிக்க வேண்டியதுதான், தேவ குமாரனையும் துதிக்க வேண்டியதுதான். ஆனால் பரிசுத்த ஆவியானவரைத் துதிக்க வேண்டியது தேவனுடைய சித்தமல்ல. பரிசுத்த ஆவியானவரை யாரும் துதித்ததாக வேதம் சொல்லவில்லையே என்று கேட்டார்.

நான் சொன்னேன், பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தின் ஒரு பகுதியல்லவா? அவர் கர்த்தர் அல்லவா? நான் எஜமானானால் என் கனம் எங்கே என்று கர்த்தர் வேதத்தில் கேட்கிறாரே. அப்படி பரிசுத்த ஆவியானவர் திரித்துவத்தின் ஒரு பகுதியாக, கர்த்தராக இருக்கிறபடியினால் நாம் அவருக்கும் கனத்தையும் மகிமையையும் துதியையும் செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம் என்றேன்.

d. "இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவிற்கு சித்தமல்ல"

(மத் 18:14).

ஒரு சிறு குழந்தையாக இருந்தாலும் கூட, ஒரு பாமர ஏழையாக இருந்தாலுங்கூட அவனையும் நாம் கர்த்தரிடத்தில் வழி நடத்த வேண்டியது அவசியம். அநேகர் ஏழைகளையும், தரித்திரர்களையும் குறித்துக் கவலைப்படுவதேயில்லை. அதிகமாக காணிக்கை கொடுக்கிறவர்களைத்தான் இன்று உலகம் கனப்படுத்துகிறது. ஆனால் வேதனையான நிலைமையிலிருக்கிற ஏழை, பாமர மக்களுக்கு உதவுவார் ஒருவருமில்லை.

ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. செல்வந்தர்களுக்கு இருப்பதும் ஒரே ஆத்துமாதான். எளியவர்களுக்கு இருப்பதும் ஒரே ஆத்துமாதான். செல்வந்தர்களானாலும் சரி, எளியவர்களானாலும் சரி, பாவம் செய்கிற ஆத்துமா சாகவே ஏகும். ஆகவே, கர்த்தர் கரிசனையோடுகூட இந்த சிறியரில்

ஒருவனுகிலும் கெட்டுப்போவது எனக்கு சித்தமல்ல என்று சொல்கிருர்.

e. ''அவன் நித்திய ஜீவன் அடைவதும் நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாக இருக்கிறது'' (யோவான் 6:40).

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வந்த நோக்கங்களில் ஒன்று நித்திய ஜீவனை தன் ஆடுகளுக்குக் கொடுப்பதற்காக! அவைகளுக்கு ஜீவன் உண்டாகியிருக்கவும் அது பரிபூரணப் படவும் வந்தேன் என்று சொன்னுர். மாத்திரமல்ல, அவர் நம்மை எழுப்புவதாகவும் நமக்கு வாக்குக் கொடுத்திருக் கிருர். நீ இரட்சிக்கப்பட்டிருந்தால் ஒருபோதும் நித்திய ஜீவனைக் குறித்து சந்தேகப்படாதே. நீ அதைப் பெற்றுக் கொண்டேன் என்று விசுவாசிப்பாயாக. நீ நித்திய ஜீவனை அடைவதும் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதும் தேவ னுடைய சித்தமாகவே இருக்கிறது.

f. ''கடன் வாங்காதே என்று வேதம் எச்சரிப்பாகவும்" (ரோமர் 13:8) ''கடன் வாங்காதிருப்பாய்'' என்று வாக்குத் தத்தமாகவும் (உபா 28:12) கூறியிருக்கும்போது நான் வீடு கட்ட அரசாங்கத்தில் கடனுக்கு விண்ணப்பிக்கவிருக் கிறேன், வியாபாரத்திற்கு கடன் வாங்குகிறேன்; திருமணத் திற்கு கடன் வாங்குகிறேன்; இது தேவ சித்தமா அறிந்து சொல்லுங்கள் என்று எந்த ஊழியரிடத்திலும் போய் ஆலோசனைக் கேட்காதே.

அப்படி ஏதாவது ஒரு ஊழியக்காரன் வந்து நீங்கள் கடன் வாங்கிச் செய்வதுதான் தேவ சித்தம் என்று தீர்க்க தரிசனம் உரைத்தால் அவன் ஒரு கள்ளதீர்க்கதரிசி. அந்த வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதே.

g. ''அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பாயாக" என்று வேதம் திட்டமாய் எச்சரிக்கும் போது (II கொரி. 6:14) புறஜாதி ஸ்திரீயைத் தெரிந்து கொண்டு அதைத் திருமணம் செய்ய தேவ சித்தத்திற்காக ஓடித்திரியாதே.

உன் சுயவிருப்பங்களை நிறைவேற்ற, வேதத்திலிருந்து ஆதரரங்களைத் தேடி உனக்கு ஒத்துப்போகும் வசனங்களைத் தெரிந்தெடுத்து உன்னைப் போலி நீதிமானுக்காதே. உனது சுய எண்ணங்களை ஒத்து ஊத, தேவன் வேதத்தை அருளவில்லை. உன்னை பூரணமாக ஒப்புக்கொடுக்கும் போது தான் அவர் தம் சித்தத்தை வெளிப்படுத்தி உன்னை வழிநடத்துவார்.

வேதத்தை மீண்டும் மீண்டும் வாசித்தாலொழிய தேவ சித்தத்திற்கான வழியை உன்னால் அறிந்து கொள்ள முடியாது. நீ தாகத்தோடும் வாஞ்சையோடும் வேதத்தை வாசிப்பாயென்றால், வேத வசனங்கள் உன்னை அருமையாக வழி நடத்திச் செல்லும். தாவீது ராஜா சொல்கிறார். ''உமது வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" (சங். 119:130).

2. குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கான தேவனுடைய சித்தம்:-

வேத வசனங்கள் குறிப்பிட்ட நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகளுக்கும் ஏற்ற தேவ சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றன. காலை வேளையிலே ஜெபித்து தியானத்தோடு வேத வாக்கியங்களை வாசிக்கும் போது அந்த வேத வாக்கியங்கள் மூலமாக ஆவியானவர் அன்றைக்கு நமக்கு வேண்டிய தேவசித்தத்தைக் குறித்து மிகவும் தெளிவாக நம்மோடு கூட பேசுகிறார். வேதவாக்கியங்கள் ஆவியும் ஜீவனுமாய். அதே நேரத்தில் கர்த்தருடைய குரலாகவும் இருக்கிறது என்பதை நாம் மறந்து போய்விடக் கூடாது. கர்த்தர் வேதத்தின் மூலம் நன்மை அதிகமாய் வழி நடத்துவதால், நாம், காலை வேளை வேத வாசிப்புக்கும், வேத தியானத்திற்கும் மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பல வேளைகளில், ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை வாசிக்கும் போது, அந்த பகுதி எவ்வளவோ ஆசீர்வாதமான தாகவும், வழி நடத்துகிறதாகவும் இருக்கக் கண்டிருக்கிறேன்.

சில வேளைகளில், வீடுகளில் தொங்க வைத்திருக்கும் வசனங்கள் மூலமாகவும் திட்டமும் தெளிவுமாய் நம்முடைய இருதயத்தில் பேசுகிறதை உணரலாம். குறிப்பிட்ட வேளை களுக்கு ஏற்ற வசனங்களாக கர்த்தர் அந்த வசனங்களைச் சுட்டிக்காட்டி தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப் படுத்துகிறார்.

பிரசங்கம் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, கர்த்த ருடைய வசனங்கள் மூலம் கர்த்தர் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையின் பிரச்சனைகளை உணர்த்தக்கூடும். ஜெபத் தோடு கூட ஆண்டவரே, இன்றைக்கு நீர் என்னோடு கூட உம்முடைய ஊழியக்காரன் மூலமாகப் பேசும் என்று ஜெபித்து விட்டுச் செல்வோமானல் கர்த்தர் ஆச்சரியமாய் நம்மோடு கூட பேசுவார்.

ஒருமுறை, என்னுடைய திருமண காரியங்களில் முடிவு எடுக்க முடியாமல் மிகுந்த பிரச்சினையோடு தவித்துக் கொண்டிருந்த அந்த வேளையில், ஒரு ஊழியர் பிரசங்கம் பண்ணின ஒரு வார்த்தை என் இருதயத்தை ஆழமாய்த் தொட்டது.

அவர் ஏசாயா 43:19 ஆம் வசனத்தை வாசித்து பிர சங்கம் செய்தார். ''இதோ, நான் புதிய காரியத்தைச் செய் கிறேன். அது இப்போதே தோன்றும், நீங்கள் அதை அறி யீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்'' (ஏசா 43:19). வசனம் என்னுடைய இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. என் ஆவியில் தேவனுடைய அக்கினி இறங்கியதை உணர்ந் தேன். கர்த்தர் புதிய காரியத்தைச் செய்யப் போகிறார் என்று உடனே தெரிந்து கொண்டேன். அன்று மாலையில் தானே தீர்க்கதரிசனம் உரைக்கிற ஒரு சகோதரி, அதே பகுதியை உணர்த்தி கர்த்தர் எனக்குச் செய்யப்போகிற புதிய காரியங்களைத் திட்டமும் தெளிவுமாக அறிவித்தார் கள். அப்படியே, ஒருவார காலத்திற்குள் என்னுடைய திருமணம் ஒழுங்கானது.

இப்படி கர்த்தர் வேத வசனங்கள் மூலமாக பேசுகிற உதாரணங்களை நூற்றுக்கணக்காகச் சொல்லலாம். நாம் தேவ சித்தத்தை அறிய வேண்டுமென்ற வாஞ்சையோடு இருக்கும் போதுதான் அதை அறிந்து கொள்ள முடியும்; கர்த்தரும் வெளிப்படுத்துவார். தேவ பிள்ளையே, நீ கர்த்தருடைய வசனத்திற்கு முக்கியத்துவம் கொடு. கர்த்தர் உன் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளைத் தீர்த்து வைப்பார். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக.

ஆண்டவருக்குச் சித்தமானால்...!

"ஆண்டவருக்குச் சித்தமானால் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம என்று சொல்ல வேண்டும்" (யாக் 4:15).

தேவ சித்தத்தைப் பற்றி ஒரு அருமையான பாடத்தை அப்போஸ்தலனாகிய யாக்கோபு நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். நாம் பேசும்போதும், எழுதும்போதும், தீர்மானம் செய்யும்போதும் இது தேவனுக்குச் சித்தமானால் என்று கூறியே ஆரம்பிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

1. ஆண்டவருக்கு சித்தமானால்:-

அவர் சொல்கிறார், "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றி, பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆதலால் ஆண்டவருக்குச் சித்தமானால்... என்று சொல்ல வேண்டும்" என்பது அவர் வாதம்.

தேவசித்தத்தில் எப்பொழுதும் சார்ந்து கொள்ளுவது நல்லது. ஏனெனில், எதிர்காலம் நம் கைகளில் இல்லை; கர்த்தருடைய கைகளிலேயேதான் இருக்கிறது. நம் ஜீவனும் நம் கைகளில் இல்லை; கர்த்தரே எல்லாவற்றையும் இயக்குகிறவர்.

தன் சுய சித்தத்தையே சார்ந்த ஒரு ஐசுவரியவான் தன் ஆத்துமாவைப் பார்த்து 'ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேக பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது நீ இளைப்பாறி புசித்துக் குடித்துப் பூரிப்பாயிரு என்றான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்; அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்" என்றார் (லூக் 12:19-21).

தேவபிள்ளையே, நிலையற்ற உலகில் நீ வாழ்கிறாய். இந்த பூமியில் சார்ந்து கொள்ள அங்கே நிச்சயமானது ஒன்று மில்லை. நீ கர்த்தர் பேரிலும், அவரது சித்தத்தின் பேரிலும் சார்ந்து கொள்வாயானால் நீ அசைக்கப்படுவதில்லை.

வேதம் சொல்கிறது, ''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்'' (1 யோவான் 2:17). ஆகவே எப்பொழுதும் நீ கர்த்தரை முன் நிறுத்தி ஆண்டவருக்குச் சித்தமானால் இன்னன்ன செய்வோம் என்று சொல்வாயாக!

2. உமக்குச் சித்தமானால் குணமாக்கும்:-

''ஆண்டவரே உமக்குச் சித்தமானால், என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும்'' (மத் 8:2).

ஆண்டவரிடம் நாம் ஜெபிக்கும்போது எப்படி ஜெபிக்க வேண்டுமென்று மேற்சொன்ன வசனம் நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது. ஆண்டவரே, எப்படியாவது எனக்குத்தாரும் என்று கேட்காமல் உமக்குச் சித்தமானால் தாரும் என்றே கேட்க வேண்டும்.

ஒரு குஷ்டரோகி ஆண்டவரிடம் இப்படித்தான் கேட்டான். ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் குணமாக்கும் என்பதே அவனுடைய ஜெபம். கர்த்தருக்குச் சித்தமில்லாமல் சுகம் பெறுவதை அவன் விரும்பவில்லை. ஒருவேளை, அவன் தேவ சித்தமில்லாமல் சுகமாகி, அதனால் பெருமை அடைந்து அல்லது சுகமடைந்த சரீரத்தால் பாவ இச்சைகளில் விழுந்தால் நரகத்திற்கல்லவா போகவேண்டும்? அதைவிட குஷ்டரோகியாகவே, அழுகி நாறும் குஷ்டரோக புண்களுடனேயே மற்றவர்களால் இகழப்படுகிற நிலையிலானாலும் தேவ சித்தத்தின் மையத்தில் இருப்பதே நலம் என்றுஎண்ணினான். ஆ! எவ்வளவு பெரிய வெளிப்பாடு அவன் கண்களில் இருந்தது.

அன்று மோசேயும் இதற்கொப்பான ஜெபத்தைச் செய்தார். ''உம்முடைய சமுகம் என்னோடே கூட செல்லாமற் போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்'' (யாத். 33:15).

உமது சமுகமல்லாத எந்த செழிப்பும், மேன்மையும் வேண்டாம். உமது சமுகம் முன் செல்லாவிட்டால் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசமும் வேண்டாம். அதைவிட உம் சமுகமுள்ள இந்த வனாந்திரமான பாலைவனத்தை விரும்புகிறேன். எங்கே உம் சமுகம் சித்தம் இருக்கிறதோ, அது எத்தனை பாடுகளுள்ள இடமானாலும் சரி, அதுவே எனக்குப் போதும். ஏனெனில் கர்த்தர் எங்களோடிருப்பீர் என்றான்.

தேவபிள்ளையே, தேவ சித்தமில்லாத மேன்மையும் செல்வமும் வேண்டாம். தேவ சித்தமே மனநிறைவையும் ஆசீர்வாதத்தையும் தரும்.

''கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்'' (நீதி. 10:22). ஆம், தேவ சித்தத்தின்படி செய்வதே என்றென்றைக்கும் மனநிறைவையும் சமாதானத்தையும் தரும்.

3. பிதாவே, உமக்குச் சித்தமானால்...!

''பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்'' (லூக். 22:42).

இயேசுக் கிறிஸ்துவின் முன்மாதிரி ஜெபம், தேவ சித்தத்தின்படி செய்ய நமக்கு வழி காட்டுகிறது. எவ்வளவு நல்ல உதாரணமான ஜெபம் இது!

இயேசு இந்த ஜெபத்தைச்செய்யும் சூழ்நிலையை சிந்தித்துப் பாருங்கள். சிலுவையை சந்திக்க ஆயத்தமான நேரம். சிலுவையைப் பற்றிய சிந்தனைகளும், வேதனைகளும், அவர் உள்ளத்தில் அலைமோதுகிறது. அடுத்த நாள், அவர் நிந்தையையும், அவமானத்தையும், சவுக்கடிகளையும் உமிழ்நீரையும், தாங்க முடியாத பாடுகளையும் சகிக்க வேண்டும்

அவர் உள்ளம் கலங்குகிறது. ஆத்துமா விவரிக்க முடியாத படி வியாகுலம் கொண்டிருக்கிறது.

அந்த வேளையில்தான் பிதாவை நோக்கி தன் சூழ்நிலையை உணர்ந்தவராய் ஜெபித்தார் "பிதாவே உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம், இந்தப் பாடுகள், நான் பருகப்போகும் சிலுவைப் பாளம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்" என்று கேட்டார்.

நீங்கியே தீரவேண்டுமென்று அவர் விரும்பாமல், தன் முழு சித்தத்தையும் பிதாவிடம் ஒப்புக்கொடுத்தார். தொடர்ந்து ஜெபித்தார். "ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்றார்.

நமது சித்தத்தை தேவனுக்கு தெரியப்படுத்துவது தவறல்ல. நமது ஆசைகள், விருப்பங்கள், ஏக்கங்களை தாராளமாக கர்த்தருக்கு தெரியப்படுத்தலாம். ஆனால் தேவ சித்தத்தை ஏற்றுக் கொள்ள எப்போதும் நாம் தயாராகவும் தேவ சித்தத்தின்படி செய்ய எப்பொழுதும் ஆயத்தமாகவும் இருக்க வேண்டும்.

இயேசுவே தன் சித்தத்தை பிதாவின் கைகளில் ஒப்புக் கொடுத்தால், நாம் எவ்வளவு அதிகமாய் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும்?

இயேசுவைக் குறித்த பிதாவின் சித்தம் எதுவாயிருந்தது தெரியுமா? இயேசு நொறுக்கப்பட வேண்டும்; இயேசு பாவங்களைச் சுமக்க வேண்டும்; இயேசு தன்னைக் குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்; இயேசு ஆத்துமாவை மரணத்தில் ஊற்ற வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருந்தது. வேதம் சொல்கிறது, "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரை பாடுகளுக்கு உட்படுத்தினார்" (ஏசாயா 53:10).

கிறிஸ்துவிற்கு தேவனுடைய சித்தம் தெளிவாகத்தெரிந்திருந்தாலும் கூட, தான் அனுபவிக்கப் போகும் பாடுகளை

உணர்ந்திருந்த போதிலும்கூட, பிதா கொடுத்த பாத்திரத்தில் பானம் பண்ண அவர் ஆயத்தமுள்ளவராக இருந்தார்.

கிறிஸ்து பூமிக்கு வந்த நோக்கமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகத் தான்! இயேசு பூமியில் வந்த நோக்கம் பாவிகளை இரட்சிக்க, இழந்து போனதைத் தேட, சாத்தானின் பிடியிலிருந்து ஜனங்களை மீட்க என்றெல்லாம் நாம் பல காரியங்களைக் கூறுகிறோம். அதே நேரத்தில் இயேசு கிறிஸ்து சொன்னார், "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்" என்றார் (எபி 10:9).

கிறிஸ்து பூமிக்கு வந்த நோக்கமே, பிதாவின் சித்தத்தை செய்யத்தான்! பரலோக மேன்மையையும், மகிமையையும் மகிழ்ச்சியையும் விட்டுவிட்டு பூமியில் பாடுபட வருவது என்பது சாதாரண காரியமல்ல. ஆயினும் அவர் பிதாவின் சித்தப்படி செய்யவும், பிதாவின் சித்தத்தைப் போதிக்கவும் நிலைநிறுத்தவும் வந்தார். இயேசு சொன்னார், "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை... எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவிற்குச் சித்தமானதை நான் தேடுகிறேன்" என்றார் (யோ 5:30).

இயேசுவின் போதனைகளெல்லாம் தன் பிதாவினுடைய சித்தத்தின்படி செய்ய வந்ததையே மீண்டும் மீண்டும் வலியுறுத்தினதாக இருந்தது.

"என் சித்தத்தின் படியல்லாமல் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன். அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்து போகாமல் கடைசி நாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவினுடைய சித்தமாக இருக்கிறது" என்றார் (யோவான் 5:38, 39).

தேவ குமாரனாகிய கிறிஸ்துவே தன்னை அனுப்பின பிதாவின் சித்தத்தின் படி தன்னை ஒப்புக்கொடுத்தாரென்றால் நாம் எவ்வளவாக பிதாவின் சித்தத்தைச் செய்ய வேண்டும்?

எவ்வளவாகத் நம்மைத் தாழ்த்தி ஒப்புக் கொடுக்க வேண்டும்?

தேவ சித்தத்தைச் செய்வதை கிறிஸ்து தன்னுடைய போஜனமாகக் கருதினார். அவருடைய உணவு, அவருடைய போஜனம், அவருடைய சுவாசம், அவருடைய ஜீவியமெல்லாம் பிதாவினுடைய சித்தம் செய்வதாகவே இருந்தது! இயேசு சொன்னார், ""என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாக இருக்கிறது" என்றார் (யோவான் 4:34).

தேவ சித்தத்தின்படி, அவர் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு நடந்தார். தேவ சித்தத்தின்படி, அவர் முள்முடி சூட்டப்பட்டார். தேவ சித்தத்தின்படி, வாரினால் அடிக்கப்பட்டு, கிழிக்கப்பட்டார். தேவ சித்தத்தின்படி ஆணிகளால் கடாவப்பட்டார். கடைசி மூச்சு இருக்கும் வரையிலும் பிதாவின் சித்தத்தை அவர் செய்தார்.

தேவ சித்தத்தின் படி செய்ததினால் அவருடைய வாழ்க்கை, அவருடைய மரணம் துயரமாய் முடிந்தது என்று எண்ணுகிறாயா? ஒருபோதும் இல்லை! அவைகளின் மூலமாகவும் மேன்மையான சுதந்திரத்தைக் கிறிஸ்து சுதந்தரித்துக் கொண்டார்.

வேதம் சொல்கிறது, ""ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தினால் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி 2:9-11).

தேவ சித்தத்தின்படி செய்வது ஒருவேளை இக்காலத்தில் பாடுகளைக் கொண்டு வந்தாலும், இந்தப்பாடுகள் இனி நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்கு ஒப்பானவைகளல்லவே! தேவபிள்ளையே, இந்த உலகத்தில் செழுமையான நாட்களை

ளுலும் சரி, அல்லது பாடுகளின் நாட்களாளுலும் சரி, ஆசீர் வாதத்தின் நாட்களாளுலும் சரி, அல்லது வறுமையின் நாட் களாளுலும் சரி, தேவ சித்தத்திற்கு என்று உன்னைப் பரிபூர ணமாய் ஒப்புக்கொடுப்பாயென்ருல், நீ நித்திய நித்திய காலமாய் பரலோக ராஜ்யத்தில் மகிழ்ச்சியடைவாய்!

வேதம் சொல்கிறது, "தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனெவனே என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (I யோவான் 2:17).

ஆம். தேவ சித்தம் செய்த பரிசுத்தவான்களுக்கு வேதத் திலும் நித்தியத்திலும் நிரந்தரமான இடம் கிடைத்தது. இன்றைக்கும் அவர்கள் ஆகாய மண்டலத்திலே நட்சத்திரங் களைப் போலப் பிரகாசித்துக் கொண்டிருக்கிருர்கள்!

ஆ! கிறிஸ்துவின் முன் மாதிரி நமக்கு எவ்வளவு நல்ல வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. அவரது அடிச்சுவடு களிலே நாம் உற்சாகமாய் நடந்து செல்கிறோம். அவர் பிதாவின் சித்தம் செய்தது போல அவருடைய சித்தம் செய்வோமாளுல் நாம் என்றென்றும் அவரோடு வாழ்ந்திருப் போம்!

தேவபிள்ளையே, தேவ சித்தம் செய். என்றென்றும் நிலைத்திருப்பாய்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் 8

தாவீதும், தேவனுடைய சித்தமும்!

வேதத்திலே எத்தனையோ பரிசுத்தவான்கள் இருந்போதிலும், தேவன் தாவீதைக் குறித்து ஒரு விசேஷமான சாட்சி கொடுத்தார்! அந்த சாட்சி என்ன தெரியுமா?

''எனக்கு சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான்" (அப் 13:22).

1. தேவ சித்தத்தின்படியான செய்கை:-

தாவீது கர்த்தருக்குச் சித்தமானதையெல்லாம் செய்தபடியினால், அவனை கர்த்தர் தன் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டார். தேவனுக்கு சித்தமானவைகளைச் செய்கிறவன் என்று சாட்சி எத்தனை விசேஷமானது!

நமக்குப் பிரியமானதை நம்முடைய பிள்ளைகள் செய்தால், நாம் பரவசமடைகிறோம். நமக்கு விருப்பமானதை சமையல் செய்து கொடுக்கும் வேலைக்காரி, வேலைக்காரன் மேல் நாம் பாசம் வைக்கிறோம். முதலாளி நினைப்பதை அப்படியே செயல்படுத்தும் தொழிலாளியை அவன் உயர்த்தி வைக்கிறான். அது போலவே, தேவசித்தம் செய்யும் விசுவாசியின் பெயரில் கர்த்தர் களிகூருகிறார். தேவ பிள்ளையே, தேவசித்தம் செய்வாயா?

தாவீது, ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த நேரம் உண்டு; சவுலை சேவித்த காலங்கள் உண்டு; காடுகளிலே அலைந்து திரிந்த வருஷங்கள் உண்டு; ராஜாவாக இருந்து அரசாண்ட மேன்மையும் உண்டு. காலங்களும், கடமைகளும், பொறுப்புகளும் எவ்வளவோ மாறினாலும் தேவ சித்தம் செய்யும் அவன் சுபாவம் மாறவே இல்லை. கர்த்தரைப் பிரியப்படுத்தி அவர் சொற்படி செய்ய வேண்டுமென்ற எண்ணம் மாறவில்லை! அவன் தன்னை தேவ சித்தத்தின் மையத்திலே காத்துக் கொண்டான்!

தேவபிள்ளையே, நீ வாழ்க்கையில் உயரலாம், தாழலாம். நீ எந்த நிலைமையில் இருந்தாலும், தேவசித்தம் செய்ய ஒப்புக்கொடு. நீ எந்தப் பேச்சைப் பேசும்போதும், அது கர்த்தருக்குப் பிரியமானதா என்று சீர்தூக்கிப் பார். எந்த செயலைச் செய்யும் முன்பும் பின்பும் அது தேவ சித்தத்தின்படியானதுதானா? கர்த்தர் அதை அங்கீகரிப்பாரா? என்பதை அறிந்துகொள். அப்போது நீ கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவனாய் விளங்குவாய் மட்டுமல்ல, கர்த்தர் தாவீதைப் பற்றி சாட்சி கொடுத்ததுபோல, உன்னையும் குறித்து ''எனக்கு சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்தான்'' என்று சாட்சி கொடுப்பார்.

2. தேவசித்தத்தின்படியான ஊழியம்:-

''தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி ஊழியம் செய்த பின்பு......" என்று அப் 13:36-ல் வாசிக்கிறோம்.

தாவீதின் ஊழியம் தேவசித்தத்தின்படியான ஊழியம். அவர் இயற்றிய சங்கீதங்கள் எல்லாம் தேவ சித்தத்தின்படியான சங்கீதங்கள்! தாவீது ஒவ்வொரு முறையும் யுத்தத்திற்குச் செல்லும்போதும், தீர்க்கதரிசிகளின் மூலமாகவும், ஆசாரியர்களின் மூலமாகவும், ஊரீம், தும்மீம் மூலமாகவும், அந்த யுத்தம் தேவனுக்கு சித்தமானதுதானா? கர்த்தர் ஜெயம் தருவாரா? என்பதை அறிந்து கொண்டு, அதற்குப் பின்புதான் யுத்தம் செய்தான். ஆகவே, ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை கர்த்தர் உயர்த்தி, உயர்த்தி, உயர்த்தி, இஸ்ரவேலின் ராஜாவாக ஏன்? ஒரு சக்கரவர்த்தியாக உயர்த்தினார் என்று சொல்லலாம். தேவ பிள்ளையே, நீ தேவனுக்கு ஊழிம் செய்ய விரும்பினாலும் கூட, அவர் உன்னைக் கொண்டு எந்தவிதமான ஊழியத்தைச் செய்ய விரும்புகிறார் என்ற தேவனுடைய சித்தத்தை திட்டமும் தெளிவுமாய் அறிந்துகொள்.

அப்போஸ்தலனாகிய பவுலுங்கூட, தான் தேவ சித்தத்தின்படியே அப்போஸ்தலனானதை மீண்டும் மீண்டும் வேதத்

நிலை தெரிவிக்கிறார் (I கொரி 1:1, எபே 1:1, கொலோ 1:1, I தீமோ 1:1).

ஒரு தேவ ஊழியத்திற்கு இறங்கும் முன், அது கர்த்தருக்குச் சித்தமானதுதானா? என்பதை திட்டமும் தெளிவுமாய் அறிந்து கொள்ள வேண்டும். தேவ சித்தம் இல்லாத ஊழியம் நிலை நிற்பதில்லை.

அநேகர் உணர்ச்சி வசப்பட்டு, திடீரென்று ஊழியத்தில் குதித்து விடுகிறார்கள். மற்றும் சிலர், மற்றவர்கள் கூறும் தீர்க்கதரிசனங்களைக் கேட்டு முடிவுக்கு வந்து விடுகின்றனர். சிலர் பொய்யான தரிசனங்களைக் கண்டு, அவசரப்பட்டு பின் பற்றி விடுகிறார்கள். பின்பு ஊழியத்தில் நிலை நிற்க முடியாமல், சாட்சியின் ஜீவியத்தை இழந்து, பின்னிட்டுப் பார்த்து, கர்த்தருடைய நாமத்திற்கு இழுக்குத் தேடி வைத்து விடுகிறார்கள்.

வேதம் சொல்லுகிறது, "ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டால் ஒழிய, ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்குத் தானாக வருவதில்லை" (எபி 5:4). "எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" (ரோ 8:30).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை அழைப்பாரானால் அவர் உன்னோடு கூட பேசுவார். சித்தத்தை திட்டமாய் வெளிப்படுத்துவார். அதற்காக நாட்களை விசேஷித்துக் கொண்டு தேவ சமூகத்தில் உபவாசித்து ஜெபி. நிச்சயமாய் அவர் உனக்குப் போதிப்பார்.

3. தேவ சித்தத்திற்கான ஆலோசனை:-

தேவ சித்தத்தின்படி செய்த தாவீது, தேவ சித்தத்தைக் கண்டுபிடிக்க நமக்கு ஒரு அருமையான ஆலோசனை கூறுகிறார். அது என்ன தெரியுமா?

"உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" (சங் 37:5).

கர்த்தர் உனக்கு காரியத்தை வாய்க்கப்பண்ணி உனக்குத் தம் சித்தத்தை தெரியப்படுத்துவார். அவருடைய மேன்மையான வழிகளிலே உன்னை நடத்துவார். அப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமானல் நீ நிறைவேற்ற வேண்டிய போதனைகள் உண்டு.

a. உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவி:-

(சங் 37:5) உன் வழிகளைப் பார்க்கிலும் கர்த்தருடைய வழிகள் மேன்மையானது! பூமிக்கு வானம் எவ்வளவு உயர்ந்ததோ, அப்படியே மனுஷனுடைய வழிகளைப் பார்க்கிலும் கர்த்தருடைய வழிகள் உயர்ந்தது. மனுஷனுடைய கண்கள் அவனுடைய ஜீவிய காலத்தின் நாட்களைத்தான் நோக்கிப் பார்க்கிறது. ஆனுல் கர்த்தரோ நித்திய காலம் வரை காண்கிறார். தேவபிள்ளையே, அந்த வல்லமையான கர்த்தரின் வழிக்கு உன்னை ஒப்புக்கொடு.

b. மனமகிழ்ச்சியோடு கர்த்தரைத் துதி:-

"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு! அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்" (சங் 37:4). உன் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவித்தபின், ஒருபோதும் கலக்கமடையாதே; உன் சுய சித்தத்தை சாராதே; முழு இருதயத்தோடு, மன மகிழ்ச்சியோடு, கர்த்தரைத் துதி. துதிகளின் மத்தியில் வாசம் செய்கிறவர் உன் மத்தியில் வந்து உன் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்.

c. கர்த்தருக்குக் காத்திரு:-

"கர்த்தரை நோக்கி அமர்ந்து அவருக்குக் காத்திரு" (சங் 37:7). மூன்ருவது படியாக, நீ அமர்ந்து காத்திருக்க வேண்டும்! இது கர்த்தர் மேல் உனக்கு உள்ள நம்பிக்கை

லையும், விசுவாசத்தையும் வெளிப்படுத்துகிறது. அப்படிப்பட்ட உனக்கு தேவன் தம் சித்தத்தை தெரிவியாமல் ஒருபோதும் இருக்கமாட்டார்.

ஆம், நீ செய்ய வேண்டிய இந்த மூன்று காரியங்களும் எப்பொழுதும் உன் உள்ளத்தில் இருக்கட்டும்!

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவி!

மன மகிழ்ச்சியோடு கர்த்தரைத் துதி!

கர்த்தருக்குக் காத்திரு!

தேவ சித்தம் செய்யாதோர்!

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே, கர்த்தாவே, என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21).

இந்த வசனத்தை சற்று ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். பிதாவின் சித்தத்தின்படி செய்ய வேண்டியது எவ்வளவு முக்கியம்; எவ்வளவு அவசியம் என்று அறிந்து கொள்ளலாம். பிதாவின் சித்தம் செய்யா விட்டால் பரலோக ராஜ்யம் செல்ல முடியாது என்று வேதம் திட்டமும் தெளிவுமாகச் சொல்கிறது.

பரலோகத்தில் பிரவேசிக்க முடியாத மூன்று தடைகளைக் குறித்து இயேசு எச்சரித்தார்.

1. மனம் திரும்பி சிறுபிள்ளையைப் போலாகாதவர்கள் (மத். 18:3).

2. ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாதவர்கள் (யோவான் 3:5).

3. தேவனுடைய சித்தம் செய்யாதவர்கள்(மத்.7:21).

விசுவாசத்தினாலே அரியப் பெரிய காரியங்களைச் செய்யலாம். வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு மலைகளை உருட்டித் தள்ளி விடலாம். சுவிசேஷ பணிக்காக உலகத்தின் குறுக்கும் நெடுக்கும் விமானத்தில் பறந்து செல்லலாம். ஆனால் நீ பிதாவின் சித்தமாக செய்கிறாயா என்பதைத் தான் கர்த்தர் கவனிக்கிறார்.

ஒருவன் வெளி நாட்டிற்குச் செல்ல வேண்டுமென்றால் அவனுக்கு விசா தேவை. அந்நிய செலாவணி தேவை. சரியான பாஸ்போர்ட் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக டிக்கெட்

தேவை. டிக்கெட் இல்லாமல் எப்படி பிரயாணம் செய்ய முடியும்? அதைப் போலவே தேவ சித்தமில்லாமல் எப்படி பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியும்? தேவ சித்தம் அவ்வளவு முக்கியமானது.

இந்த அத்தியாயத்தில் தேவ சித்தம் செய்யாத ஒரு சிலரைக் குறித்து நாம் தியானிப்போமாக.

1. தேவ சித்தத்திற்கு விலகி ஓடிய யோனா:-

கர்த்தர் தன்னுடைய ஊழியக்காரனை யோனாவிடம், "நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்து எட்டினது" என்றார் (யோனா 1:2).

கர்த்தருடைய ஊழியக்காரனாகிய யோனாவிற்கு கர்த்தர் அறிவிக்காமலேயே நினிவேயைக் குறித்த ஒருபாரம் உண்டாயிருந்திருக்க வேண்டும் நினிவேக்கும் போவது தேவனுடைய சித்தம் என்பதை அவன் முதலிலேயே அறிந்திருக்க வேண்டும். அப்படி அவன் அறியாமல் போனாலும்கூட, கர்த்தர் தெளிவாக தம்முடைய சித்தத்தை அவனுக்கு வெளிப்படுத்தி நினிவேக்குப் போ என்று கட்டளையிட்டார்.

ஆனால், யோனா செய்தது என்ன தெரியுமா? வேதம் சொல்கிறது: "யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு போக கப்பல் ஏறினான்" (யோனா 1:3).

கவனியுங்கள். யோனா, கர்த்தருடைய சமுகத்திற்கு விலகினான் என்று போட்டிருக்கிறது. எந்த ஒரு மனுஷன் தேவனுடைய சித்தத்தை செய்யவில்லையோ, அப்போது கர்த்தருடைய சமுகம் அவனோடு செல்வதில்லை. அவன் அவனை அறியாமலேயே தேவ சமுகத்தை விட்டு விலகுகிறான். இது எத்தனை பரிதாபமானது!

அருமையான தேவனுடைய பிள்ளையே, கர்த்தருடைய சமுகத்தில்தான் வல்லமையுண்டு. கர்த்தருடைய சமுகத்தில் ஆனந்தமும், பரிபூரணமும் பேரின்பமும் உண்டு. கர்த்தருடைய சமுகத்தில் கனமும் மகிமையும் உண்டு. ஒரு தேவனுடைய பிள்ளை தேவ சித்தத்தைச் செய்யாமல் கர்த்த

ருடைய சமுகத்தை விட்டு விலகும்போது அவன் எல்லா ராலும் பரிதபிக்கக்கூடிய ஒரு நிர்ப்பந்தமான நிலைமைக்கு வந்து விடுகிறான்.

கர்த்தர் பல வேளைகளில், நாம் துணிகரமாக கர்த்த ருடைய சித்தத்தை விட்டு விலகும்போது அதை அனுமதித்து விடுகிறார். என்றாலும் அவர் அன்புள்ள தேவனாக இருக்கிற படியினால் கடல் கொந்தளிப்பையும், புயலையும் வரவிட்டு, தேவ சித்தம் அறிய வேண்டியதின் அவசியத்தைப் போதிக்கிறார். தேவ சித்தம் செய்யாதபடியினால் யோனா சென்ற கப்பல், கடலிலே தத்தளித்தது! புயல்காற்று வீசி னது. கடைசியில், யோனா மீன் வயிற்றுக்குள்ளே போக வேண்டியதாயிற்று. இத்தனை பாடங்களையும் அவனுக்குப் படிப்பித்துக் கொடுத்த பின்புதான், அவன் தேவ சித்தம் செய்ய நினிவேக்குப் புறப்பட்டுப் போனான்.

நம்முடைய ஜெபங்களிலெல்லாம் நாம் ஆண்டவரை நோக்கி'' உம்முடைய சித்தம் பரமண்டலங்களில் செய்யப் படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கிறோம். ஆனால் நாம் அதனுடைய அர்த்தத்தை உணர்ந்து கொண்டோமா?

பரலோகத்திலுள்ளவைகளெல்லாம் தேவனுடைய சித்தம் செய்கின்றன. மாபெரும் தேவதூதர்களாக இருந் தாலும், ஒவ்வொருவரும் கர்த்தருடைய கட்டளைகளை கொஞ்சமும் எதிர்த்து பேசாமல் அப்படியே நிறைவேற்று கிறார்கள். கேருபீன்கள், சேராபீன்கள், நான்கு ஜீவன்கள், இருபத்தி நான்கு மூப்பர்கள் இன்னும் அத்தனை ஜீவராசியும் தேவசித்தம் செய்கின்றன.

நூற்றுக்கு நூறு தேவ சித்தம் பரலோகத்தில் செய்யப் படுகிறது. மட்டுமல்ல, பூமியிலுள்ள சகல இயற்கையும், மிருக ஜீவன்கள், ஆகாயத்து பறவைகள் யாவும் கர்த்தருக்கு அப்படியே கீழ்ப்படிந்து அவரது உத்தரவை நிறைவேற்று கின்றன.

ஆனால், மனிதன் மாத்திரமே கர்த்தருடைய சித்தத்தைச் செய்யாமல், தன்னுடைய சுயத்தில் சாய்கிறான். நினிவேக்குப் போகச் சொன்னால் தர்ஷீசுக்கு கப்பல் ஏறுகிறான். எந்த சித்தம் தனக்கு சாதகமானது; எந்த சித்தம் தனக்கு லாபகரமானது; எந்த சித்தம் தனக்குப் பேர் புகழ் உண்டாக்குவது என்றெல்லாம் கணக்குப் போடுகிறான்

தேவன் தன்னுடைய பிள்ளைகளை நேசிக்கிறபடியினால் தேவசித்தம் செய்யாதவர்களையும் தண்டித்துணர்த்தி, தேவசித்தம் செய்யும்படி வற்புறுத்துகிறார் ஆனால் இந்த கிருபை எப்போதும் கிடைப்பதில்லை

2. சுய சித்தத்தில் சார்ந்து கொண்ட நேபுகாத் நேச்சார்:-

நேபுகாத் நேச்சார் என்ற பாபிலோன் ராஜா தன்னுடைய நாடு முழுவதிலும் தன்னுடைய சுயசித்தமே நிறைவேறுகிறது என்று எண்ணிக் கொண்டான். தன்னுடைய சுய சித்தத்தின்படியே எல்லாவற்றையும் செய்தான். தனக்காக மா பெரும் பட்டணமாகிய பாபிலோனை கட்டி, தானுடைய அரண்மனையின் உப்பரிகை மேல் நின்று தன்னையே மெச்சிக்கொண்டு பெருமையாக, இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமையின் பிரதாபத்திற்கென்று ராஜ்யத்தின் அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்.

கர்த்தர் இதைக் கேட்டார். நேபுகாத்நேச்சாருக்கு ஒரு பாடம் கற்பிக்கும்படி அவனை மனுஷரிலிருந்து தள்ளிப்போட்டார் அவன் புத்திமாறிப் போனான். மாடுகளைப் போல புல் மேய்ந்தான். அவனுடைய தலை மயிர் கழுகுகளுடைய சிறகுகளைப் போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்கள் போலவும் ஆயிற்று. அவனுடைய சரீரம பனியிலே நனைந்தது கர்த்தர் அவனுக்குப் போதித்த பாடமெல்லாம் மனித சித்தம் வீணும் வெறுமையுமாக இருக்கிறது என்பது தான்.

நேபுகாத்நேச்சார் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்கிற வரையிலும் பரிதாபமான ஒரு வாழ்க்கை வாழ

வேண்டியதாயிற்று. அவருக்கு புத்தி தெளிவடைந்தவுடன் தன்னுடைய சுய சித்தத்தை உதறிவிட்டு கர்த்தரை மகிமைப் படுத்திச் சொன்னார், "அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனைகளையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கைகளைத் தடுத்து அவரை நோக்கி, என்ன செய்கிறீர் என்று சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை என்றார்"
(தானி 4:35).

அருமையான தேவனுடைய பிள்ளையே, ஒருபோதும் நான் என்கிற தற்பெருமையோ, என்னால் ஆகும் என்ற சுய சித்தமோ, உனக்கு வேண்டாம். கர்த்தர் தமக்கு சித்தமானதையே உன்னுடைய வாழ்க்கையில் செய்ய ஒப்புக் கொடு.

சங்கீதக்காரன் சொல்கிறான்: வானத்திலும், பூமியிலும், சமுத்திரங்களிலும், எல்லா ஆழங்களிலும் கர்த்தர் தமக்குச் சித்தமானதையெல்லாம் செய்கிறார் (சங் 135:6).

2. தேவ சித்தம் பாதி, தன் சித்தம் பாதி செய்த சவுல்:-

தேவன் சவுலிடத்தில் தன்னுடைய சித்தத்தை வெளிப் படுத்தி அமலேக்கியர் அத்தனை பேரையும், அவர்களது உடைமைகளையும் அழிக்கும்படி கட்டளையிட்டார்

கர்த்தர் சொன்னார் "இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது அமலேக்கு அவர்களுக்கு வழி மறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன் இப்பொழுதும் நீ போய் அமலேக்கை மடங்கடித்து அவனுக்குள்ள எல்லாவற்றையும் சங்கரித்து அவன் மேல் இரக்கம் வைக்காமல் புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்றுபோடக் கடவாய் என்றார்" (I சாமு 15:7-11)

அப்படியே தேவ சித்தம் செய்ய சவுல் புறப்பட்டு தன்னுடைய படைவீரர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு அமலேக்கியரை பட்டயக் கருக்கினால் சங்காரம் பண்ணினான். ஆனால் ஆடு மாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்

டாம் தரமானவைகளையும், ஆட்டுக்கடாக்களையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப் போட மனதில்லாமல் தப்ப விட்டு, அற்பமானவைகளும் உதவாததுமானவைகளுமான சகல வஸ்துக்களையும் எல்லாவற்றையும் அழித்துப் போட்டான் (I சாமு 15:9).

கவனியுங்கள், சவுல் தேவ சித்தத்தில் பாதி செய்தான். அதற்குள் அவனுடைய சுயசித்தம் குறுக்கிட்டுவிட்டது. அவனுடைய பொருளாசை தேவசித்தத்தை முற்றிலும் செய்யாதபடி தடுத்தது. அவனுடைய சுயஞானம் கர்த்தருக்கு பலியிட ஆடு, மாடுகளைச் சேர்த்தது. இது சவுலின் பார்வைக்கு நலமாகத் தோன்றினாலும் கர்த்தருடைய பார்வையில் மனஸ்தாபமாக இருந்தது. கர்த்தர் துயரத்தோடுகூட, நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது; அவன் என்னை விட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனான் என்றார் (I சாமு 15:11).

தேவபிள்ளையே, நீ தேவ சித்தத்தை முற்றிலுமாக நிறைவேற்றாமல் போகும்போது கர்த்தர் நிச்சயமாகவே மனஸ்தாபப்படுவார். உன் செய்கை நிச்சயமாகவே அவருக்கு வேதனை உண்டாக்கும்.

தேவ சித்தத்தை முற்றிலும் செய்யாத சவுலின் மேல் திடீரென்று நியாயத் தீர்ப்பு வந்தது. சவுலைப் பார்த்து கர்த்தர் சொன்னார், நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்

(I சாமுவேல் 15:23).

இது எத்தனை கசப்பான நியாயத்தீர்ப்பு! தேவ பிள்ளையே, இப்படி கசப்பான நியாயத்தீர்ப்புகள் உன்மேல் வராதபடி தேவ சித்தத்தையே முழுவதும் நிறைவேற்ற உன்னை ஒப்புக்கொடுப்பாயாக!

4. தேவ சித்தத்தை விற்றுப் போட்ட பிலேயாம்:-

புற ஜாதிகளின் மத்தியிலிருந்து கர்த்தர் பிலேயாமை தன்னுடைய ஊழியக்காரனாகத் தெரிந்து கொண்டார். இது

கிடைப்பதற்கரிய ஒரு பெரிய பாக்கியம்! ஆனால் இந்த பிலேயாம், தேவன் தனக்குக் கொடுத்த வரத்தையும், கிருபைகளையும் பணத்திற்காக விற்றுப் போட ஆயத்தமாக இருந்தான்.

பாலாக் என்ற ராஜாவோடு ஒப்பந்தம் பண்ணி இஸ்ரவேலைச் சபிப்பதற்கு முன்வந்தான் (எண் 22:21).

தேவ சித்தத்தை அவன் மீறி சென்றபடியினால், கர்த்தர் தம்முடைய தேவ தூதனை அனுப்பினார். கழுதை வழி விலகிச் சென்றது. பிலேயாம் கழுதையைப் போட்டு அடித்தான். கழுதை வாய் திறந்து பேசி அவனை எச்சரித்தது.

கர்த்தர் தேவ சித்தத்தை அவனுக்கு வெளிப்படுத்த இத்தனை காரியங்களைச் செய்ய வேண்டியதாயிற்று!

கடைசியில் தேவ சித்தத்திற்கு விரோதமாக, தந்திரமாக பாலாக்கிடம் இஸ்ரவேல் மக்களை இச்சையினால் வீழ்த்தி ரகசிய வழிகளை சொல்லிக்கொடுத்து கலகம் பண்ணினான். முடிவில் அந்தத் தீர்க்கதரிசியின் வாழ்க்கை பரிதாபமாக முடிந்தது. அவன் பட்டயத்தால் மரித்தான் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (எண் 31:8).

தேவ சித்தத்திற்கு விலகி ஓடுவதும், சுய சித்தம் செய்வதும் தேவ சித்தத்தோடு கலப்படம் செய்வதும், தேவ சித்தத்தை விற்றுப் போடுவதும், பரிதாபமான முடிவுகளைக் கொண்டுவரும் என்று நாம் தியானித்தோம். தேவ பிள்ளையே, கர்த்தருடைய பரிபூரண சித்தம் செய்ய உன்னை நீ முற்றிலும் ஒப்புக்கொடுப்பாயாக.

வேதம் சொல்கிறது: பரிபூரண சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).

அத்தியாயம் 10

இன்னும் சில வழிகள்:

தேவ சித்தத்தை அறியப் பழகினவர்கள், சூழ்நிலையைக் கொண்டும், சந்தர்ப்பங்களைக் கொண்டும், வாய்மொழிகளைக் கொண்டும், கர்த்தருடைய வழி நடத்துதலை அறிந்து கொள்வார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதுவுமே திடீரென்று நடப்பதில்லை. எல்லாம் முன்னாலேயே திட்டமிடப்பட்டு, அவருடைய அனாதி தீர்மானத்தின்படியே நடக்கிறது.

ஒரு வாசல் திடீரென்று அடைபடும் போது, ஒருபோதும் கலங்க வேண்டியதில்லை. கர்த்தர் இன்னொரு நல்ல அருமையான வாசலைத் திறந்தருளுவார்.

சில வேளைகளில், நன்றாக ஒழுங்கான திருமணம் கடைசி வினாடி நேரத்தில் நின்று விடக்கூடும். பெண் வீட்டார் மிகவும் கலங்கித் தவிப்பார்கள். ஆனால் தேவபிள்ளைகள், கர்த்தருடைய சித்தத்தை அறிந்தவர்கள் ஒருபோதும் கலங்குவதில்லை! தேவனில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கும் என்று விசுவாசத்தோடு கர்த்தரைத் துதித்து போற்றுவார்கள். அப்பொழுது கர்த்தர் திருமணம் தடைபட்டதற்கான காரணங்களையும், புதிதாக வரப்போகிற ஆசிர்வாதங்களையும் வெளிப்படுத்திக் காண்பிப்பார்.

நாம் பல சூழ்நிலைகளின் வழியாகச் செல்லும்போது எப்பொழுதும் கர்த்தருடைய சித்தத்தின் மேலேயே நம் கவனத்தைப் பதிப்பது நல்லது.

ஒரு காரை ஓட்டிக்கொண்டு செல்கிறவன் சாலையிலுள்ள விளக்குகளைக் கவனிக்கிறான். சிகப்பு விளக்கு எரிகிறதைக் கண்டதும் தன் காரை நிறுத்தி விடுகிறான்.

மஞ்சள் விளக்கு வந்ததும் தன் காரை ஓட்டி புறப்படுவ தற்கு ஆயத்தமாக்குகிறான். பச்சை விளக்கு தெரிந்தவுடன் உற்சாகமாக ஓட்டிச்செல்கிறான். அவன் ஆபத்திலோ, விபத்திலோ சிக்கிக் கொள்வதில்லை!

அந்தப்படியே, தேவ சித்தத்தை நோக்குகிறவன் சூழ்நிலைகளை ஜெபத்தோடு எதிர்நோக்குகிறான். கர்த்தர் எப்பொழுது நிறுத்தச் சொல்வார்; எப்பொழுது புறப்பட ஆயத்தமாக்குவார்; எப்பொழுது கொண்டு செல்வார் என்பதையெல்லாம் அறிந்து கொள்வான்.

இயேசு சொன்னார், ''காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், அது இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்'' (யோவான் 3:8).

வானத்தின் தோற்றங்களையெல்லாம் நிதானித்து அறிகிறவர்கள், தேவ சித்தத்தை நிதானித்து அறியக் கூடாதா?

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் எவ்விதமாய் தேவ சித்தத்தை அறிந்தார்கள் என்பதைப் பற்றிய சில குறிப்புகளை இந்த அத்தியாயத்தில் காண்போமாக.

1. ஊரீம், தும்மீம் :-

ஊரீம், தும்மீம் என்பது தேவ சித்தத்தை வெளிப்படுத்துகிற கர்த்தருடைய கருவியாய் இருந்தது. கர்த்தர் அதை அணிந்து கொண்டிருந்த ஆசாரியர்கள் மூலம் இஸ்ரவேல் ஜனங்களோடே பேசினார்.

கர்த்தர் மோசேயிடம் சொல்லும்போது, ''நியாய விதி மார்பதக்கத்திலே ஊரீம், தும்மீம் என்பவைகளை வைப்பாயாக; ஆரோன் கர்த்தருடைய சந்நிதானத்தில் பிரவேசிக்கும் போது, அவைகள் அவன் இருதயத்தின் மேல் இருக்க வேண்டும்'' (யாத் 28:30) என்று கட்டளை கொடுத்தார்.

''இதோ நான் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடு கிறேன். பனி தோலில் மாத்திரம் செய்து பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி, இஸ்ரவேலை என் கையினால் இரட்சிப்பீர் என்று அதினால் அறிவேன்" என்றான்(நியா 6:37).

அப்படியே ஆயிற்று. அவன் மறுநாள் காலமே எழுந் திருந்து, தோலைக் கசக்கி அதிலிருந்த பனி நீரை ஒரு கிண்ணம் நிறையப் பிழிந்தான்.

அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: ''நான் இன்னும் ஒரு விசை மாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என் மேல் மூளாதிருப்பதாக; தோலினாலே நான் இன்னும் ஒரே விசை சோதனை பண்ணட்டும்; தோல் மாத்திரம் காய்ந் திருக்கவும், பூமியெங்கும் பனிபெய்திருக்கவும் கட்டளையிடும்" என்றான்.

அப்படியே, தேவன் அன்று ராத்திரி செய்தார். தோல் மாத்திரம் காய்ந்திருந்தது. பூமியெங்கும் பனிபெய்திருந்தது (நியா 6:37-40).

மிக முக்கியமான தீர்மானங்களின் போது மட்டுமே, மிகுந்த ஜெபத்தோடு இவ்விதமாய் அடையாளங்கள் மூலம் கர்த்தரிடம் கேட்கலாம். மற்றபடி கர்த்தருடைய வழி நடத்துதலுக்கே நம்மை ஒப்புவித்து விடுவது நல்லது. கர்த்தரை நாம் பரீட்சை பார்க்கக் கூடாதே!

சிலர் ஞாயிறு ஆராதனைக்குப் போக வேண்டுமானால் ஆண்டவரே மழை பெய்தால் உமக்குச் சித்தமில்லை என்றும், மழை பெய்யாவிட்டால் ஆலயத்திற்குப் போவேன் என்றும் ஜெபிக்கிறார்கள். இது தவறு. கர்த்தரை பரீட்சை பாராதே! மழை பெய்தாலும், பெய்யா விட்டாலும் சபை கூடுதலில் நீ பங்கு பெற வேண்டும் என்பதே தேவ சித்தம். மனமிருந் தால் மார்க்கமுண்டு.

நினைவில் கொள்ளுங்கள், ''கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ, அவனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார்'' (சங்கீதம் 25:12).

அத்தியாயம் 11

பத்து ஆசீர்வாதங்கள்!

''உமது சித்தத்தின்படி ஆகக் கடவது'' (மத் 26:42).

தேவ சித்தம் கடமைக்கோ அல்லது கட்டாயத்திற்கோ செய்யப்படுவதல்ல; அது மன மகிழ்ச்சியோடு செய்யப்பட வேண்டியதாகும்.

தேவ சித்தம் செய்யும் போது கிடைக்கும் மன நிறைவு உலகம் தரக் கூடாத சந்தோஷமாய் இருக்கிறது. தேவ சித்தம் செய்யும் போது கிறிஸ்துவைப் பிரியப்படுத்துகிறோம். மட்டுமல்ல, நித்திய நித்தியமாய் தேவ சமுகத்தில் நிலை நிற்போம்.

கர்த்தருடைய சித்தத்தின்படி செய்வதால் வரும் ஆசீர் வாதங்கள் எண்ணற்றவை. இதோ அவற்றிலிருந்து பத்து ஆசீர்வாதங்கள்!

1. பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு:-

''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல் லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை'' (மத் 7:22).

இந்த பகுதியைத் தொடர்ந்து வாசித்துப்பாருங்கள், ஒரு ஆச்சரியமான உண்மையைக் கண்டுபிடிப்பீர்கள்.

''அந்நாளிலே அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத் தோமல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோ மல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய் தோமல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்கா லும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே,

என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்'' என்றார் (மத் 7:22).

ஒன்றை அறிந்து கொள்ளுங்கள். தேவ சித்தத்தின்படி யில்லாத ஊழியம்; தேவ சித்தத்திற்கு மாறாக உரைக்கும் தீர்க்கதரிசனம்; தேவ சித்தத்தின்படி இல்லாத அற்புதங்கள் எல்லாம் அக்கிரமச் செய்கையாயிருக்கும்!

அநேகர் விசுவாச வார்த்தைகளை திரும்பத் திரும்ப சொன்னால், வீடு, கார், பங்களா எல்லாம் கிடைக்கும்; கர்த்தரிடத்தில் ஜெபிக்க அவசியமே இல்லை; வாக்குத்தத்தங்களை உபயோகித்து உரிமையோடு எடுத்துக் கொள்ளலாம் என்று போதிக்கிறார்கள். ஆனால் அது தேவ சித்தத்தின்படி வருகிறதுதானா என்று அவர்கள் கவனிப்பதில்லை!

வாக்குத்தத்தத்தின்படி உரிமையோடு நீங்கள் எடுத்துக் கொள்ளலாம், ஆனால் அப்படி உங்களுக்குக் கிடைக்கிறது உங்களுக்குச் சாபமாய் மாறும்! பரலோக வாசலை உங்களுக்கு அடைத்துவிடும்.

ஆகவே, தேவசித்தத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுங்கள். எப்படியாவது அற்புதம் செய்யவேண்டு மென்று அல்ல; கர்த்தருடைய சித்தபடியே நடக்க உங்களை ஒப்புக்கொடுங்கள். அதுவே உன்னதமானது!

2. சோதனைகளிலிருந்து பாதுகாப்பு:-

தேவ சித்தத்தை செய்து நிறைவேற்றும்போது கர்த்தர் விசேஷ பாதுகாப்பை நமக்கு வாக்குப்பண்ணி இருக்கிறார்.

''நான் சொல்லிய இந்த வார்த்தைகளை கேட்டு இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்" (மத் 7:24).

கர்த்தர் சொல்கிறதின்படி செய்கிறதுதான் தேவ சித்தத்தை நிறைவேற்றுதலாகும்! அப்படிச் செய்கிறவனே புத்தியுள்ள மனுஷனவான். அவன் கன்மலையாகிய கிறிஸ்துவிலே தன் அஸ்திபாரத்தை போட்டிருக்கிறான்.

''பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை'' ஆ! எத்தனை அருமையான ஆசீர்வாதமிது! தேவசித்தத்தின் படி செய்தால், ஆவிக்குரிய ஜீவியம் அசைக்கப்படுவதுமில்லை, விழுந்து போவதுமில்லை. திட அஸ்திபாரமான கிறிஸ்துவிலே நாம் கெம்பீரமாக நிற்போம்! நம் ஓட்டம் ஜெயத்துடன் முடியும்.

3. என்றென்றும் நிலைத்திருத்தல்:-

அழிந்துபோகிற, மாறிப்போகிற நிலையற்ற இந்த உலகில் தேவசித்தம் செய்கிறவர்களுக்கு ஒரு அருமையான வாக்குத் தத்தத்தைக் கர்த்தர் கொடுக்கிறார். நீ என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய் என்பதே அந்த வாக்கு.

வேதம் சொல்கிறது, ''தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே, என்றென்றும் நிலைத்திருப்பான்''

(1யோவான் 2:17)

தேவ சித்தத்தைத் தன் வாழ்க்கையில் நிறைவேற்றி முடித்த தாவீது மிகுந்த மகிழ்ச்சியோடு, ''நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்'' என்று கூறுகிறார் (சங்கீதம் 23:6). அல்லேலூயா!

4. தேவன் செவி கொடுப்பார்:-

தேவ சிததம் செய்யும் போது நமக்குக் கிடைக்கிற நான்காவது ஆசீர்வாதம் நமக்கு தேவன் செவிகொடுப்பார் என்பதே!

''ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்'' (யோவான் 9:31).

இது யார் கூறின வார்த்தைகள் தெரியுமா? பிறவிக்குருடனாயிருந்து கர்த்தரால் பார்வையடைந்தவன், . பரிசேயருக்கு போதித்து உணர்த்திய வார்த்தைகள்! கிறிஸ்துவுக்கு ஏன் பிதா செவிகொடுக்கிறார் என்பதற்கு அவன் வாழ்க்கையில் கண்ட விடை இது!

இயேசுவை "பாவி" என்று பரிசேயர் நியாயந்தீர்த்த போது, பிறவிக் குருடனாயிருந்து கண்திறக்கப்பட்டவன் சூடாக பதில் கொடுத்தான், "பாவிகளுக்குத் தேவன் செவி கொடுக்கிறதில்லை என்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து, அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார்" என்றான்

(யோவான் 9:31)

தேவ பிள்ளையே, கர்த்தர் உனக்குச் செவி கொடுக்க வேண்டுமோ? நீ தேவ பக்தியுள்ளவனாயிரு. கர்த்தருடைய சித்தத்தின்படி செய். நிச்சயமாக செவி கொடுப்பார்!

5. ஆவிக்குரிய போஜனமாயிருக்கிறது:-

தேவ சித்தம் செய்வது நமக்கு போஜனம். "ஆவிக்குரிய டானிக்" நம் உள்ளான மனுஷனை அது பெலப்படுத்துகிறது.

இயேசு சொன்னார், "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவான் 4:34).

போஜனம் புசிப்பது நமக்கு பசியைப் போக்குகிறது. திருப்தியை ஏற்படச் செய்கிறது!

அதுபோலவே கர்த்தருடைய சித்தத்தை செய்தோம் என்ற உணர்வு நம் உள்ளத்தில் ஆத்மதிருப்தியை ஏற்படுத்துகிறது. மட்டுமல்ல, உள்ளம் கலங்காமல் சமாதானமாய் இருக்கிறது!

6. கை கூடிவரும் ஆசீர்வாதம்:-

யார் யார் கர்த்தருடைய சித்தத்தை செய்ய வேண்டும் என்று உண்மையாய் வாஞ்சித்து அதற்காக முயற்சியெடுக்கிறார்களோ, நிச்சயமாய் கர்த்தர் அவர்களுக்கு தம் சித்தத்தை காண்பித்து, அதை வாய்க்கச் செய்வார்!

இதோ, மாணிக்கக் கல்போல கர்த்தருடைய வாக்குத்தத்தம் உனக்கு வருகிறது!

"கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" (ஏசா 53:10). வாய்க்கும்! நிச்சயமாய் வாய்க்கும்!

நான் என் எம்.ஏ. பரீட்சைக்காக மிகவும் பாரத்தோடு படித்துக்கொண்டிருந்தபோது என் மூத்த சகோதரி, என் பாடப் புத்தகத்தின் மேல் "கர்த்தருக்கு சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" என்று எழுதினார்கள். ஆ! அது எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்தது தெரியுமா? அந்த நிமிடம் முதல் பரீட்சையைக் குறித்து கவலைப்படாமல் தேவ சித்தத்தில் சார்ந்து கொண்டேன். கர்த்தர் எனக்கு ஜெயத்தைக் கட்டளையிட்டார்!

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு பூரணமாய் ஒப்புக் கொடுத்திருக்கும்போது, ஒரு காரியம் தடைபட்டுப் போகிறதென்றால் அதற்காக நாம் கலங்க வேண்டியதில்லை. கர்த்தர் நம்முடைய நன்மைக்காகவே அதைத் தடுத்துப் போட்டார் என்று நிச்சயமாய் அறிந்து கொள்ளலாம். அதன் காரணங்களை நாம் நிச்சயமாய் ஒருநாள் அறிந்து கொள்வோம்.

7. தேவ குடும்பத்தில் ஐக்கியம்:-

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம். ஆண்டவரே எனக்குப் போதியும் என்று கேட்கும்போது அவருடைய மாணவர்களாகிறோம். அவரைப் பின்பற்ற முற்றிலும் ஒப்புக்கொடுக்கும்போது அவருடைய சீஷர்களாகிறோம். அவரை நேசித்து அவரோடு சஞ்சரிக்கும்போது அவருடைய சிநேகிதர்களாகிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய சித்தத்தின்படி செய்யும்போது அவருடைய குடும்பத்தில் அங்கத்தினர்களாக, நாம் சகோதர சகோதரிகளும் தாயுமாகிறோம்.

இயேசு சொன்னார், "என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்முடைய கைகளைத்

தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி, இதோ, என் தாயும், என் சகோதரர்களும் இவர்களே! பரலோகத்திலிருந்து என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறான் என்றார்” (மத் 12:48,9).

ஆ! தேவ சித்தம் செய்து கிறிஸ்துவுக்கு சகோதரனும், சகோதரியும், தாயுமாய் எண்ணப்படுவது எவ்வளவு பாக்கியமாகும்! இது எத்தனை பெரிய ஆசீர்வாதம்.

8. தேவனுடைய புத்திரராகிறோம்:-

வேதம் சொல்லுகிறது, ‘‘தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி நம்மைச் சுவிகார புத்திராகும்படி முன் குறித்திருக்கிறார்’’ (எபே 1:6).

ஆம்! நாம் பிள்ளைகளாவது அவருக்கு சித்தம்! முன்பு நாம் அந்நியரும் பரதேசிகளுமாயிருந்தோம். இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பே இருந்தோம். தேவனற்றவர்களாக வாழ்ந்து வந்தோம்.

ஆனால் தேவன் கிருபையாக நம்மைத்தேடி வந்தார்; மீட்டுக் கொண்டார். அவர் தமது சித்தத்தை வெளிப்படுத்தி நம்மை புத்திரராக்கிக் கொண்டார்; மட்டுமல்ல, நாம் அவரை அப்பா, பிதாவே என்றழைக்கும் புத்திர சுவிகார ஆவியையும் தந்திருக்கிறார்.

9. தேவ இரகசியங்களை அறிகிறோம்:-

கர்த்தருடைய சித்தத்தின்படி செய்ய ஒப்புக் கொடுக்கிறவர்களுக்கு தேவன் கிருபையாக தமது இரகசியங்களை வெளிப்படுத்துகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், ‘‘தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்’’ (எபே 1:10).

தமஸ்கு வீதியில் தேவனால் சந்திக்கப்பட்ட பவுல், ‘‘ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்?’’

என்று தேவ சித்தத்திற்குத் தன்னை பரிபூரணமாக ஒப்புக் கொடுத்தார் (அப் 9:7).

அந்த நாள் முதற்கொண்டு, கர்த்தர் அவனுக்கு அவன் வாழ்விலுள்ள தமது சித்தத்தையெல்லாம் வெளிப்படுத்தியது மட்டுமல்ல, கர்த்தருடைய இரகசியங்களை, வேதத்தின் மறை பொருட்களை, தீர்க்கதரிசன புதை பொருட்களையெல்லாம் வெளிப்படுத்திக் கொடுக்க சித்தமானார்! அதை பவுல் எவ்வளவு அருமையாக தம் நிருபத்தில் வெளிப்படுத்துகிறார்!

ஆகவே பவுல் தன்னை, "தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரன்" என்று (I கொரி 4:1) தைரியமாய் மார்தட்டி முழங்குகிறார்!

ஆம், தேவபிள்ளையே, நீ தேவ சித்தம் செய்யும் போது கர்த்தர் உனக்கும் ஆழங்களின் பொக்கிஷங்களைத் தந்தருளுவார்.

10. மறுரூபமாவீர்கள்:-

தேவ சித்தம் உங்களை தேவசாயலிலே மறுரூபமாக்கும்; உங்கள் மனதை புதிதாக்கும்; உங்களுக்கு பகுத்தறியும் வரத்தையும் தந்தருளும்.

"தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"

(ரோமர் 12:1).

இந்த வசனத்தை சற்று ஆழமாக கவனியுங்கள். இதில் மூன்று வகையான சித்தங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது.

a. நன்மையான சித்தம்! முதலில் தேவ சித்தம் செய்வது கடினமாகவோ, கசப்பாகவோ, காணப்பட்டாலும், முடிவில் அது நன்மையும் இன்பமும் ஆசீர்வாதமானதாகவும் இருக்கும்.

b. பிரியமான சித்தம்: தேவனுக்குச் சித்தமானதே விசுவாசிக்கு பிரியமானதாக இருக்க வேண்டும். ஆகவே விசுவாசி எப்பொழுதும் கர்த்தரைப் பிரியப்படுத்த தேவ சித்தம் செய்ய வேண்டும். "தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" என்று தாவீது ஜெபிக்கிறார்.

c. பரிபூரணமான சித்தம்: பரலோகத்தில் செய்யப்படும் சித்தம் பரிபூரண சித்தம். பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலும் செய்யப்படுவதாக என்று கிளிப்பிள்ளை கூறுவதைப் போல கூறாமல், நம்மை முற்றிலும் பரிபூரணமாக அவருடைய சித்தத்திற்கு அர்ப்பணிப்போமாக!

தேவபிள்ளையே, மேற்கூறிய பத்து ஆசீர்வாதங்களும் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது! தேவசித்தம் செய்து, கர்த்தரில் களிகூர்ந்து இந்த அரிய பெரிய ஆசீர்வாதங்களை ஆனந்தமாய் அனுபவிப்போமாக!

மனம் விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலம் மீண்டும் உங்களைச் சந்திக்கக் கிருபை செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

தேவசித்தம் செய்வதின் முக்கியத்தை மீண்டும் மீண்டும் வேதம் வலியுறுத்தியும் கூட அதைக் குறித்து சரியான போதனையுள்ள புத்தகங்கள் தமிழில் வெளிவரவில்லை. ஆகவே, இந்தப் புத்தகத்தை கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்காகவும், விசுவாசிகளின் உபயோகத்திற்காகவும் வெளியிட்டேன்.

இந்தப் புத்தக வெளியீட்டின் செலவை ஒரு அருமையான குடும்பத்தினர் ஏற்றுக் கொண்டார்கள்.

Mr. I. Jebaraj & family, Ahmadi, Kuwait.

அவர்களுக்கு என் உள்ளத்தின் ஆழத்தின் இருந்து நன்றி கூறுகிறேன். கர்த்தருடைய ஊழியத்தை இவ்வளவாக தாங்கி உதவிய அவர்களை கர்த்தர் விசேஷ விதமாக ஆசீர்வதிப்பாராக! இந்த புத்தகத்தால் வரும் ஒவ்வொரு நன்மையும், ஆசீர்வாதங்களும், அந்த அருமைக் குடும்பத்தினரைச் சேருவதாக!

புத்தக ஊழியங்களை ஊக்குவியுங்கள்! எழுப்புதல் தீ தொடர்ந்து பரவ, ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள்.

இந்த புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!